ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

6 - APR 1963

ஜனவரி—1963

சுவாமி விவேகானந்தா

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBAKKALVI" OFFICE

94-95, New Street, Mannady, Madras-1.

POST BOX No. 1818. PHONE NO. 24544.

★

"ஆரம்பக் கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் எமது "திரு. வி. க தமிழ் வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 100-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், ஆரம்பப் பாடசாலைகளுக்கு "ஆரம்பக் கல்வி" மாதப் பத்திரிகை இனாமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப்படும்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள் :

திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	3	28-5-'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	3	28-5-'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	3	28-5-'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	11	18-5-'60

ஆரம்பக்கல்வி

129086

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3]

[தனி இதழ் 4 அணா

T15m21,N40
31K3

மலர் 25 } ஜனவரி 1963 { இதழ் 1

ஜனநாயகக் கொள்கைக்கு ஆபத்து

அக்டோபர் திங்கள் இருபதாம் நாளன்று அக்கிரமமான முறையில் இந்தியாவின் வட எல்லைமீது படையெடுத்த சீன ஏகாதிபத்தியம், நவம்பர் திங்கள் இருபதாம் நாளன்று, திடீரென்று போர் நிறுத்த அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது அல்லவா?

தாங்கள் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து தங்கள் படைகள் டிசம்பர் முதல் நாளிலிருந்து பின் வாங்கிச் சென்றுவிடும் என்கிற செய்தியையும் அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாகச் சீன நாட்டு ஆட்சி உலகுக்கு அளித்தது அல்லவா?

அந்தப் போர் நிறுத்த அறிவிப்பும் பின் வாங்கும் செய்தியும் வெளியாகி மாதங்கள் இரண்டு உருண்டு ஓடிவிட்டன. மாதங்கள்

தான் உருண்டு ஓடிவிட்டனவேதவிர, வஞ்சக வலை விரித்துள்ள மஞ்சள் ஏகாதிபத்தியத்தின் படைகள், எங்கெங்கிருந்து விலகிச் செல்வதாக அறிவித்தனவோ, அங்கிருந்தெல்லாம் முழுமையாக அகன்று விட்டனவா என்றால், இல்லை.

ஆதிக்க வெறியும் அக்கிரம நெறியும் கொண்ட அந்தப் படைகள், இந்தியாவின் சில பகுதிகளிலிருந்து முழுமையாக விலகிச் சென்றிருக்கின்றன.

வேறு சில பகுதிகளிலிருந்து, விலகிவிட்டதாக அறிவித்துவிட்டு, உண்மையில் விலகாமலே மறைந்தும் ஒளிந்தும் நடமாடுகின்றன.

இன்னும் சில பகுதிகளில், விலகிக் கொண்டே இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே, ஆழமாகக் கால் ஊன்றிக் கொண்டிருக்கின்றன.

T15ஊ211,N40
31K2

கம்யூனிஸ்ட் சீன ஏகாதிபத்தியம், உண்மையிலேயே போரை நிறுத்திவிட்டு, இந்தியப் பேரரசுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்க எண்ணியிருக்கிறதா அல்லது சில பல வாரங்களுக்குப் போர் நிறுத்தம் படை விலகல் என்கிற நாடகத்தை ஆடிவிட்டு, எதிர்பாராத இடத்தில் திடீரென்று மாபெரும் தாக்குதலை நடத்தத் திட்டம் இட்டிருக்கிறதா ?

இந்த இருவகைப் பாதைகளில் எந்தப் பாதையில் பீகிங் அரசாங்கம் செல்ல விருக்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் மிக முக்கியமான ஓர் உண்மைமட்டும் தெள்ளத் தெளிவாகவும் திட்ட வட்டமாகவும் தெரிகிறது. சீன அரசாங்கத்தின் தேன் ஒழுகும் பேச்சையும் தென்றல் போல் காணப்பட்ட போக்கையும் கண்டு அதனை உண்மையான நண்பன் என்று மனமார நம்பி ஒரு முறை ஏமாந்த இந்தியா மீண்டும் ஒரு முறை அப்படி ஏமாறத் தயாராய் இல்லை என்பதே அந்தச் சீரிய உண்மை.

சீன ஏகாதிபத்தியத்தின் விபரீதப் படையெடுப்பால், இந்தியா, எந்த நேரத்திலும் தன்மீது எத்தகைய தாக்குதலும் நிகழ்த்தப் படக்கூடும்—எனவே எத்தகைய ஆபத்துக்கும் தான் தயாராக இருப்பதே முறை என்னும் அரிய பாடத்தைக் கற்றுக் கொண்டு விட்டது.

சீனப் படையெடுப்பு தொடங்கிய நாள் முதலாக இந்திய அரசாங்கமும் சரி, இந்திய மக்களும் சரி, போர் முயற்சிகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டுவருகிறார்கள்.

சீனப் படையெடுப்பு, மீண்டும் எந்த நேரத்தில் எத்தகைய உருவத்தில் தோன்றினாலும் சரி, அதனைத் தூள் தூளாக உடைத்தெறிவதற்கு இந்தியா தயாராக நிற்கிறது.

129086

நம் படைவீரர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவரு கிறது. அவர்களுக்குத் தரப்படுகிற போர்க் கருவிகளின் வகையும் தொகையும் வேகமாக வளர்ந்துவருகின்றன. போர் முயற்சிக்கும் படை வலிமைக்கும் தேவைப்படும் பலவகைப் பண்டங்களின் உற்பத்தி கூடுதலாகியபடி இருக்கிறது. கிராமப் புறங்களில் உள்ள வயல் வெளிகளிலிருந்து நகரப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலை கள் வரையில், சிறந்து பொலியும் கல்விச்சாலைகளிலிருந்து ஓங்கி உயர்ந்துள்ள மருத்துவமனைகள் வரையில், பல திறப்பட்ட அரசாங்க அலுவலகங்களிலிருந்து பலவகைப்பட்ட தனியார் பணிமனைகள் வரையில் எங்கும், எதிலும், நாட்டுப் பாதுகாப்புப் பணியின் சாயல் தென்படுகிறது.

இப்படியெல்லாம் இந்தியா முழு மூச்சோடு போர்ப் பணியில் ஈடுபட்டிருப்பதன் நோக்கம், இந்திய எல்லைகளைச் சீன வெறியர் களிடமிருந்து காப்பாற்றுவதுதான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் சீன ஏகாதிபத்தியத்தின் மூர்க்கத்தனமான தாக்குதலி லிருந்து நம் நாட்டை நாம் காப்பாற்றும்போது, உண்மையில் காப் பாற்றப்படுவது, நம்முடைய நாடு மட்டுமல்ல மிகச் சிறந்த-மிக இனிய ஒரு தத்துவமும் ஆகும். ஜனநாயகக் கோட்பாடு என்னும் மக்களாட்சித் தத்துவமே அது

மக்களுக்காக மக்களால் ஆளப்படும் மக்களுடைய ஆட்சிக்குத் தான் ஜனநாயக ஆட்சிமுறை என்று பெயர். இந்த ஆட்சிமுறைப் படி இயங்கிவரும் நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கும். அந்தந்தக் கட்சிக்கென்று தனித்தனிக் கொள்கைகளும் திட்டங்களும் இருக்கும். குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல் நடைபெறும். அந்தத் தேர்தலின்போது, பொதுமக்கள், எந்தக் கட்சியின் குறிக்கோள்களும் வேலைத் திட்டங்களும் தங்கள் இதயங் களுக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றனவாகத் தோன்றுகின்றனவோ அந்தக் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவர். அந்தக் கட்சியின் ஆட்சிமுறை பொதுமக்களுக்குப் பிடித்தமானதாக இல்லையென்றால், அடுத்த பொதுத் தேர்தலின்போது, அந்தக் கட்சியை அரசு கட்டிலிலிருந்து இறக்கிவிட்டு வேறோர் கட்சியை அங்கே அமர்த்து கிற உரிமை இம் மக்களுக்கு உண்டு. தத்தம் உள்ளங்களுக்கு நியாயம் என்று தோன்றிய கருத்துக்களை மேடைகள் மூலமாகவும், புத்தகங் கள் வாயிலாகவும், பத்திரிகைகள் வழியாகவும் எடுத்துக்கூறும் உரிமை அனைவருக்கும் உண்டு. எழுத்துரிமை, பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்தரம், ஆட்சிகளை மாற்றி அமைக்கும் உரிமை, இவை யாவும் மக்களுக்கு உண்டு. ஜனநாயக ஆட்சிமுறையில். ஓங்கி உயர்ந்து நிற்கும் ஜனநாயக மாளிகையின் கடைக்கால்கள் இவைதான்.

ஆனால் கம்யூனிச சர்வாதிகார ஆட்சிமுறையைக் கொண்ட நாட்டிலேயோ நிலைமை முற்றிலும் வேறாக இருக்கும். ஒரே ஒரு கட்சிதான் அங்கே இயங்கமுடியும். அது கம்யூனிஸ்ட் கட்சியாகத் தான் இருக்கமுடியும். ஒரே ஒருவகைக் கருத்துத்தான் அங்கே பவனி வரமுடியும். அது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகத்தான் இருக்க முடியும். பிறவகைக் கட்சிகளும் பிறவகைக் கருத்துக்களும் முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும். அத்தகைய நாட்டில் ஆட்சியாளர்களின் கருத்துக்களும் திட்டங்களும் கொள்கைகளும் நடைமுறைகளும் அவை எவ்வளவுதான் தவறானவையாக இருந்தாலும் அவற்றை எதிர்த்து யாருமே குரல் எழுப்பமுடியாது. எந்த மனிதராவது அரசாங்கத்தின் தவறுகளை இடித்துக்காட்டினால் அவருடைய உயிர் ஆபத்துக்கு ஆளாகிவிடும். எந்தப் பத்திரிகையாவது அரசாங்கத்தின் நோக்கிலும் போக்கிலும் உள்ள பழுதுகளைச் சுட்டிக் காட்டினால் அந்த இதழின் அலுவலகம் மூடப்பட்டு விடும். தனிமனிதர்களுக்கு அந்த நாட்டில் எத்தகைய சுதந்தரமும் இருக்கமுடியாது. அரசாங்கம் ஆட்டுவிக்கிற படியெல்லாம் ஆடித் தீரவேண்டிய பதுமைகளாகவே மக்கள் அங்கே இருக்கமுடியும். ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே கருத்து—இவை தான், கம்யூனிச சர்வாதிகார மாளிகையின் அடிப்படைகள்.

பற்பல வகையான நிறங்களும் உருவங்களும் கொண்ட பல வகையான மலர்கள் சுதந்தரமாகப் பூத்துக் குலுங்குகின்ற பூந் தோட்டம் போன்றது ஜனநாயக அமைப்பு.

மாபெரும் இயந்திரம் ஒன்றின் நூற்றுக்கணக்கான பல் சக்கரங் களைப் போல, தமக்கென்று எத்தகைய உரிமையும் இல்லாமல், விசை கொடுத்தவுடன் கொடுக்கப்பட்ட திசையில் சுழன்றுகொண் டிருக்கும் மக்களைக் கொண்டது சர்வாதிகார அமைப்பு.

இந்த இருவகை ஆட்சி முறைகளில் ஜனநாயக முறையே சிறந் தது, சீர்மிகுந்தது, உயர்ந்தது, உத்தமமானது என்பதை, சிந்தனைத் தெளிவும் சீரிய உள்ளமும் படைத்த நல்லறிவாளர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர்.

இத்தகைய எழிலும் ஏற்றமும் படைத்த ஜனநாயகப் பாதையில் கம்பீர நடை போட்டுச் செல்கிறது இந்தியா.

தனி மனிதர்களுடைய உரிமைகளைத் துச்சமென ஒதுக்கித் தள்ளும் சர்வாதிகாரப் பாதையில் உருண்டுகொண்டிருக்கிறது சீனா.

தற்போது உள்ள உலக அரசியல் அமைப்பில் மிகப் பெரிய ஜனநாயக நாடாகத் திகழ்வது இந்தியாதான். இது உண்மை; யாராலும் மறுக்க முடியாத உண்மை.

அதுபோலவே, இன்றைய உலகத்தில் மாபெரும் சர்வாதிகார நாடாக விளங்குவது சீனுதான் என்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது.

இத்தகைய சூழ்நிலையில், இந்தியாவின்மீது சீனு முழு அளவில் தாக்குதல் நடத்தி, அந்தத் தாக்குதலின் விளைவாக இந்தியா வீழ்ச்சி உறுமானுல், அந்த வீழ்ச்சி, இந்தியா என்கிற ஒரு நாட்டின் வீழ்ச்சியாக மட்டும் இருக்க முடியாது. ஜனநாயக ஆட்சிமுறை என்கிற ஒப்பற்ற கோட்பாட்டின் வீழ்ச்சியாகவும் அமைந்துவிடும்.

ஆசியாக் கண்டத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகத் திகழும இந்தியாவைச் சீனு வீழ்த்த முடியுமானுல், அதன் பிறகு, இலங்கை, இந்தோனீசியா, மலேயா முதலிய ஏனைய ஆசிய ஜனநாயக நாடுகளை வீழ்த்தச் சீனுவுக்கு நீண்ட காலம் தேவைப்படாது. ஏனென்ருல் இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவையெல்லாம் சிறிய நாடுகள்.

ஆசியாவில் ஜனநாயகத்துக்கு அழிவு ஏற்பட்டால் அந்த அழிவு ஆப்ரிக்க, ஐரோப்பிய ஜனநாயக நாடுகளுக்கு மெல்ல மெல்லப் பரவக்கூடும்.

ஆப்ரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஜனநாயகம் சாய்க்கப்பட்டுவிட்டால் அமெரிக்காவிலும் அதன் எதிரொலி பிறகோர் நாள் கேட்கக்கூடும்.

சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறவேண்டுமானுல், இந்தியாவில் ஜனநாயகத்திற்கு வீழ்ச்சி ஏற்படுமானுல் உலகம் முழுவதிலுமே ஜனநாயகத்தின் எதிர்காலம் இருள் நிறைந்ததாக மாறிவிடும்.

ஆம்! மஞ்சள் சீனுவின் ஏகாதிபத்திய சர்வாதிகார வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த இந்தியா மேற்கொண்டுள்ள புனிதப் போராட்டம், அநத வெள்ளத்திலிருந்து தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நடத்தப்படும் போராட்டம் அல்ல. ஜனநாயகம் என்னும் தலைசிறந்த கோட்பாட்டை உலகம் முழுவதற்குமாகக் காப்பாற்றித்தர நடத்தப்படுகிற போராட்டமும் ஆகும்.

இந்த உண்மையை மிக நன்ருக அறிந்திருக்கிற காரணத்தால் தான் ஜனநாயக இந்தியாவின்மீது சர்வாதிகார சீனுவின் தாக்குதல் தொடங்கியவுடனே, நாம் விரும்பிக் கேட்பதற்கும் முன்னரே, இங்கிலாந்து—அமெரிக்கா—ஆகிய இரு பெரும் ஜனநாயக நாடுகளின் அரசுகளும் நமக்கு உதவி புரிய ஓடோடி வந்தன.

"ஜனநாயகம் உயிர் வாழ வேண்டுமா? அல்லது சர்வாதிகாரம் நிலைபெற்று இருக்க அனுமதிக்கப் போகிறோமா? என்பதே இப்பொழுது உலகத்தின் முன் உள்ள பிரச்சினையாகும். சீனர்கள் இந்தியாவின்மீது தொடுத்துள்ள ஆக்கிரமிப்புப்போர் உலக மக்கள் முன்னிலையில் இந்தக் கேள்வியைத்தான் எழுப்பியிருக்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் இப் புனிதப் போரில், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நாடுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும்."

என்று, கேரள மாநிலக் கவர்னர் திரு வி. வி. கிரி அவர்கள், ஆலப்புழையில் நவம்பர் திங்கள் 20-ஆம் நாளன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் சொற்பொழிவு ஆற்றியிருப்பதும் இந்தக் கருத்தையே வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

"செஞ்சீனாவின் தாக்குதலினால் இந்தியா வீழ்ச்சியுறுமானால், ஆசியாவில் உள்ள கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் அனைத்திற்கும் ஆபத்து ஏற்படும்.

ஜனநாயக அரசுகளைக் கவிழ்த்து விட்டு, பீகிங்குக்கு முற்றிலும் அடிமையாக இருக்கும் கம்யூனிஸ்ட் சர்வாதிகார ஆட்சியை அதற்கு மாறாக ஏற்படுத்தவே செஞ்சீனா விரும்புகிறது.

சீனாவிடமிருந்து இந்தியாமீது ஏற்பட்டுள்ள தாக்குதல் வெறும் எல்லை மோதல் அல்ல. அது மிகவும் விபரீதமான ஒரு பிரச்சினை ஆகும்.

தன் இராணுவ பலத்தைக் காட்டுவதன் மூலம், ஆசிய நாடுகள் அனைத்தும் பயந்து கொண்டு தன்னை எதிர்நோக்கி நிற்கும் என்னும் நம்பிக்கையில் ஆசிய நாடுகள் அனைத்தின் கவனத்தையும் திருப்ப சீனக் கம்யூனிஸ்ட் அரசு விரும்புகிறது. ஜனநாயக ஆட்சி முறையைப் பின்பற்றும் பெரிய நாடு ஒன்று — இந்தியா — தனக்குப் போட்டியாக இருப்பதைச் சீன அரசாங்கத்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை."

இந்தக் கருத்துரையைத் தந்திருப்பவர் மலேய நாட்டின் தலைமையமைச்சர் திரு. துங்கு அப்துல் ரகிமான் அவர்கள் ஆவர். நவம்பவர் 28 அன்று, மலேயா பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்த நேரத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இது.

கேரளக் கவர்னரும் மலேயா தலைமையமைச்சரும் தெரிவித்துள்ள கருத்துக்கள் இந்திய-சீனப் போராட்டத்தின் உள்ளடக்

பெருமை பெற்றவர். விவேகானந்தரின் தந்தை விசுவநாத தத்தர். புகழ்பெற்ற வழக்கறிஞர். அறிவு நிறை செல்வர். சமரச உள்ளத்தினர்.

விவேகானந்தரின் தாய் வீரமாது. அவர் தம் மூன்றாவது புதல்வரான பூபேந்திரர் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றமை கேட்டு, "அவனை நான் தேசத்துக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். பூபேந்திரனின் வேலை இப்போதே ஆரம்பமாகியுள்ளது" என்று கூறிய அன்னை.

இவ்விதமாகப் பழம் பெரும் சமூக மளித்த ஆன்மிகச் செலவமும், பெற்றோர் காட்டிய துறவு, துணிவு, அன்பு ஆகிய இலட்சியமும் கொண்டு 1863-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ந் தேதி இவ்வுலக யாத்திரையைத் தொடங்கினார் சுவாமி விவேகானந்தர்.

ஒருவர் உருவாவதற்குக் காரணமான பரம்பரை, சூழ்நிலை ஆகிய இரண்டில், முன்னால் கூறப்பட்டது விவேகானந்தரைப் பொறுத்தவரை மிக உன்னதமானது பின்னால் கூறப்பட்டதோ ஆரம்பத்தில் அவ்வளவு சிறப்புறச் சொல்வதற்கில்லை.

நரேந்திரர் பிறந்து வளர்ந்த சமூகச் சூழ்நிலை, கொந்தளிப்பும் சூறாவளியும் நிறைந்த ஒன்று.

படித்த வகுப்பினரான சிலர், உலகாயத விஞ்ஞானப் படிப்பின் பெருக்கத்தில் தோற்ற நிலையின் கொள்கைகள் சிலவற்றை மேலெழுந்த முறையில் பற்றிக் கொண்டமை, தொன்று தொட்டு நிலவி வரும் மரபுகளில் நம்பிக்கை குன்றியது, பாமர மக்களின் அறியாமை, அதனால் விளைந்த குருட்டு நம்பிக்கைகள், அந்நிய ஆட்சியால் நாட்டில் நிலவிய வறுமை இவை ஒரு புறம். இந்து சமூகத்தின் படித்த வகுப்பினரிடையே சமூக இன்னல்களை எதிர்த்துப் புரட்சி தோன்றினமை மறுபுறம். இத்தகைய கொந்தளிப்புச் சக்திகள் மத்தியில் இந்த உலக அன்பர் வாழ வேண்டியவரானார்.

எனினும் நன்மையும் தீமையும் மோதிய இம் மாபெரும் குழப்பத்தில் எது சிறந்ததோ அதைத் தேர்ந்தெடுத்துத் தமதாக்கிக் கொண்டதே அவர்தம் பெருமை.

இந்தக் காட்டிலே கற்பகத் தரு எது எனக் கண்டு கொண்டார் அவர் அவருக்கும், அவர் மூலம் உலகுக்கும் அமரத்துவம் வர்ஷித்த ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடைந்தார்.

வயது பத்தொன்பது. இளமைப் பருவம். அப்போதே விவேகானந்தர் தட்சிணேசுவரர் ஆலயத்துக்கு அடிக்கடி செல்லத் தொடங்கினார், தமது குருநாதரைத் தேடி. ஆறு ஆண்டுகளில் அந்த ஊற்றின் அமுதம் முழுவதையும் உண்டுவிட்டார். "என்னிடமிருந்த எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்து விட்டேன்;

பெற்று அகத்தில் ஆண்மை உணர்ச்சி கிளர்ந்தெழும் போது உபநிஷதப் பொருளையும், ஆத்மாவின் பெருமையையும் முன்னிலும் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இப்போது நீங்கள் இலட்சியமாகக் கொள்ள வேண்டியது அநுமாரைத்தான். இராமபிரானின் ஆக்ஞைக்காக அவர் வாழ்வையோ சாவையோ கருதாமல் கடலைத் தாவியதை மனத்தில் கொள்ளுங்கள். எதிர் வார்த்தையின்றிக் குருவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் பிரம்மச்சரியத்தைக் கண்டிப்புடன் அநுஷ்டிப்பதும்தான் வெற்றியின் இரகசியம். அநுமன் அடங்கிப் பணி செய்வதற்கு எப்படிச் சின்னமோ அதே போல உலகத்தையெல்லாம் அஞ்சச் செய்யும் வீரத்துக்கும் சின்னமாவார். அவரே உங்கள் இலட்சியம்.

இடிகள் இடித்தாலும் மின்னல்கள் மின்னினாலும் அவற்றையும் பொருட்படுத்தாது சாதக பட்சி மேகத்திலிருந்து இழியும் நீர்த் துளியைத்தான் பருகுமே ஒழிய வேறு நீர் நிலைகளைத் தேடிச் செல்லாது. அதே போல உன் இலட்சியத்துக்கு எவ்வளவு இடுக்கண் நேர்ந்தாலும் அதை விட்டுவிட்டுப் பிற இலட்சியங்களைத் தேடிச் செல்லாதே.

உங்களில் ஒவ்வொருவரும் மகா பலசாலியாக வேண்டும். இதை ஒரு கட்டாயமான கட்டளையாகச் சொல்கிறேன். கீழ்ப்படிதலோடும், எப்போதும் செயலுக்கு ஆயத்தமாகவும், நீங்கள் செய்யவிருக்கும் பணியில் ஈடுபாட்டுடனும் இருப்பீராகில் உங்களையாரும் வெல்லமுடியாது.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி—இம் மூன்றும், இவற்றுக்கு மேலாக அன்பும் வெற்றிக்கு இன்றியமையாதவை. பரபரப்பு கூடாது.

தன்னம்பிக்கை மிகவும் அவசியம். தன்னம்பிக்கை யுளோரே பெருமையும் வலிமையும் எய்தியுள்ளனர் என்பது எந்நாட்டுச் சரித்திரமும் என்றைக்கும் போதிக்கும் உண்மையாகும்.

இந்தியா வீழ்ந்தால் உலகஞானமனைத்தும் வீழும்; ஒழுக்க முறைமைகள் ஒழியும்; மத உணர்வு அழியும்; இலட்சியங்களை நாடும் உணர்வு மடியும். காமமும் போகமுமே ஆண் தெய்வமும் பெண் தெய்வமும் ஆகும். அந்தத் தெய்வங்களுக்குப் பணம் பூசாரியாகும். வஞ்சனையும் பலாத்காரமும் போட்டியும் இந்தப் பூசையின் சடங்குகளாகும். இந்த ஆராதனையில் ஆத்மாவே பலியாகும். இம்மாதிரி ஒரு காலும் நிகழலாகாது.

(கல்கி)

எதிர்பார்த்துத் தயாராக இல்லாதிருந்த நிலையில், நமது படைகள் பல இடங்களை இழந்தன!

சீனப்படைகள் ஏராளமான அளவிலே குவிந்ததும், ஏராளமானவர்களை ஈவு இரக்கமற்ற முறையிலே பலி கொடுத்திடும் வெறி முறையில் தாக்குதலை நடத்தியது! மறைந்திருந்து தாக்குவது - பணிவதுபோலப் பாசாங்கு காட்டிப் பாய்வது — சுற்றி வளைத்துக்கொள்வது போன்ற சூதுமுறைகளால் சீனப் பகைவர்கள் பெற்ற வெற்றிகளை, போர் முறையையும் வீரமரபின் மாண்பினையும் அறிந்தவர்களும், போற்றுபவர்களும் பாராட்ட மாட்டார்கள்!

துவக்கத்திலே நம்மைத் தீண்டிய இந்தத் தோல்விகளால் நாம் துவண்டுவிடவில்லை!

நல்லெண்ணமுள்ள நாடுகள் நமது பக்கம் திரண்டன!

நமது படைகள், அணிவகுப்புகளைச் சீரமைத்துக்கொண்டு திருப்பித் தாக்கவும், இழந்த இடங்களைத் திரும்பப் பெறவும், துடித்துக் கொண்டிருக்கின்றன!

மண்ணாசைகொண்ட சீனா, நீதி நேர்மையற்ற முறையில் நமது நாட்டைத் தாக்கியது கண்டு, நல்லெண்ணம் கொண்ட நாடுகள் பலவும் நமது பக்கம் திரண்டெழுந்து நின்று, எத்தகைய பேரப் பேச்சுமில்லாமல்-நிபந்தனைகள் விதிக்காமல் உதவிகள் பல செய்திட முன்வந்துள்ளன! உலகெங்குமிருந்தும் சீனா மீது கண்டனக் கணைகள் சரமாரியாகக் கிளம்பிப் பாய்ந்தன!

பொய்யை மெய்போலாக்கிப் பிரசாரமும் செய்தனர்!

தாக்கினர்—தகர்ந்துவிடவில்லை நாம்! அதிர்ச்சியூட்டினர் — நிலைகுலையவில்லை. ஆயுத பலத்தைக் காட்டினர் — அஞ்சிச் சரண்புகவில்லை!

'எங்கள்மீது தவறு இல்லை. இந்தியாதான் எம்மைத் தாக்கிற்று' என்று பொய்யை மெய்போலாக்கிப் பிரசாரம் செய்தனர்—நம்புவார் இல்லை!

எனவே இந்நிலையில், மேற்கொண்டு தாக்குவதைவிட சமாதான நாடகமொன்று ஆடி, மற்ற நாட்டவர் கண்களிலே மண்தூவி, இந்தியாவுக்கு ஆதரவாகத் திரண்டுள்ள நல்லெண்ணத்தைக் குலைத்து, இடைவேளையைப் படைக்கலன்களைக் குவித்திடவும் படைகளைப் பெருக்கிடவும் பயன்படுத்தி, மாரிக்காலம் முடிந்ததும் புதிதாக ஒரு பழி போட்டுவிட்டு, மீண்டும் இந்தியாவைத் தாக்கலாம் என்று சீனா திட்டமிட்டு, சமாதான துறைத் தாக்குதலை நடத்தி வருகிறது—சமரசம் பேசுகிறது—பிடித்த இடத்தை விட்டு வெளியேறுவதாகக் காட்டிக் கொள்கிறது — பிற நாடுகளுக்கெல்லாம் ஓலைகளை அனுப்புகிறது!

இனியும் நம்புமா நாடு?

'பஞ்சசீலம்' பேசி, 'பாண்டுங்' நடத்தி, 'பண்டித நேருவை விடச்

சிறந்த சமாதானப் பிரியர் இந்தப் பாரினில் இல்லை' என்று பாராளு மன்றத்திலும், மக்கள் மன்றத்தி லும், தேனொழுகப் பேசி, திட ரென்று வெறித்தாக்குதலை நடத் திக்காட்டிய சீனாவின் பேச்சை, நாடு இனி நம்பத்தயாராயில்லை!

பல பொருள் தரத்தக்க வார்த் தைகளைத் தொடுத்து சீனு அனுப்பிய கடிதத்துக்கு, இந்திய முதலமைச்சர் திட்டவட்டமான பதிலை அனுப்பிவிட்டார்!

'எம்மிடம் சிக்கிய இடங்கள் எம்முடையவை; உம்மிடம் உள்ள இடங்கள்பற்றி, பேசி சமாதானமான, முடிவுக்கு வர லாம்' என்று சீனு அழைக்கிறது! இதிலுள்ள சதி நோக்கை, இந் தியா அறிந்து, அம்பலப்படுத்தி விட்டது!

பழங்கதையாகிவிட்டது பஞ்சசீலப் பேச்சு!

போரற்ற உலகு காணவே இந்தியா விழைகிறது! அந்த நோக்கத்துடன் நடத்தப்பட்டது தான் 'பாண்டுங்' மாநாடு! அங்கு சீனப் பிரதமர் சூ-என்-லாய், நேரு பெருமகனுருடைய அன் பையும் ஆதரவையும் பெற்று, அகமிக மகிழ்ந்து, 'அவனி தழைத்திடச் செய்யும் அருங் குணத் தலைவர் இவரே' என்று அர்ச்சனை நடத்தினூர்!

அவைகளெல்லாம் இன்று சூ-என்-லாய்க்குப் பழங்கதையாகப் போய்விட்டன! அப்போது அவர் பஞ்சசீலம் பேசினூர் - இப் போது பீரங்கிகளைப் பேசச் சொல்கிறூர்!

உரிமையை இழந்தா 'சமாதானம்' பேசுவோம்?

இந்தியாவும், இந்தியத் தலைமை யமைச்சரும் சமாதானத்தில் நாட்டம் கொண்டிருப்பதால், 'சமர் என்றூல் அஞ்சிச் சரண் அடைவர்' என்று சூ-என்-லாய் எண்ணுகிறூர்!

இந்தியா சமாதானத்தை விரும்புகிறது - போற்றுகிறது - ஆனூல் தன்மானம் இழந்து அல்ல! உரிமை அழிக்கப்பட்ட நிலையில் அல்ல! 'கண் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினூல் கைகொட்டிச் சிரிப்பார்கள்' என்றூர் கவி பாரதி!

கண்ணினும் மேலானது உரிமை! அதனை இழந்து சமா தானம் பெற, இந்தியா ஒரு போதும் சம்மதிக்காது!

உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் இந்தியா பணியாது!

"அப்படியானூல், போர்தானு -பெரும் போராக மூண்டு விடுமே! பயங்கரமான விளைவு கள் ஏற்படும்-தயாரா?" என்று சீனு உருட்டி மிரட்டிக் கேட் கிறது!

ஆம்-போர்தான்! ஐயம் இல்லை -தயக்கம் கொள்ளப் போவது மில்லை!

உரிமை காத்திடப் போர் தன்மானப் பாதுகாப்புக்கான

போர் - சனநாயகத்துக்காகப் போர்!

இதனை நடத்தி வெற்றி பெறும் ஆற்றல் அற்ற நாடு அல்ல இந்தியா! பெரும் படைகளை நடத்திச் சென்று, வீரமிக்க போர் பல புரிந்து, வெற்றி வாகை சூடி, பேரரசு அமைத்த பெருவீரர்கள் நடாத்திய போர் பற்றி புலவர்கள் இயற்றியுள்ள காவியம் பல பெற்ற நாடு!

கூனன் நிமிருவான் — கோழையும் வீரனாவான் — புலவர்கள் பாடியுள்ள பரணி படித்தால்!

'அன்றொரு நாள்' என்று அலட்சியப்படுத்திடவும் வேண்டாம்! அந்த வீர உணர்ச்சி இன்றும்பட்டுப்போய்விடவில்லை. விட்ட இடம் பாயும் - கணையெனக் காலமறிந்து கிளம்பும் — மாற்றாரைத் துளைத்திடும்!

வேங்கை எனச் சீறிப்போரிட்டனர் நம் மறவர்கள்!

இடங்களை இழந்துவிட்ட நிலையிலும் நமது போர் வீரர்கள், வடகிழக்குக் களத்திலும் லடாக் பகுதியிலும் காட்டிய வீரம் பற்றிய முழு விவரம் கிடைத்திடவில்லை என்றாலும், இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடைத்திடும் செய்திகளைக் கேட்டாலே நெஞ்சம் விம்முகிறது; நீர் துளிக்கிறது கண்களில்; 'வெட்டி வீழ்த்துவர்' என்று அறிந்தும், வேங்கை எனச் சீறிப் போரிட்டுள்ளனர் நம் மறவர்கள்.

"களத்திலே படைக்கலன் இழந்த மாவீரன் ஒருவன், மாற்றான் தனது மார்பிலே வீசிய வேலினைப் பறித்து எடுத்து, அதனை ஏந்திப் போரிட்டான்" எனக் கூறுகிறது புறநானூறு!

வடகிழக்குப் பகுதியில்—ஆயுதமற்ற நிலையில், எந்தப் படைக்கலனையும் ஏந்திடக் கரம் வேண்டும்; 'அந்தக் கரம் இருக்கும் போது, கருவி தேடிக் கவலைப் படுவானேன்?' என்று கருதிய வீரத் திருமகனொருவன், சீனர்களைக் கரம்கொண்டே தாக்கினான்; அவர்கள் கருவிகொண்டு தாக்கினர்—சிதைத்தனர்—ஆனால், செத்துச் சாயுமுன், சீனர் பலரைக் கொன்று குவித்தான் அம் மாவீரன்!

அழைப்புக்கிடைத்ததும் அவர்களும் அணிவகுப்பர்!

வீரம்செறிந்த நாடு இது - வெற்றி பல கண்ட நாடு! ஆனால், வாள் வடிக்கத் தேவைப்படும் இரும்பை கலப்பையாகிக்கொண்டிருக்கும் நாடு இது! டாங்கிகள் ஓட்டத் திறம்படைத்த கரங்கள், இன்று ஏர் பிடித்துக்கொண்டுள்ளன!

அழைப்புக் கிடைத்ததும் - அணி வகுப்புத் திரண்டதும் - படையினில் சேர்ந்து போரிடத் துடிக்கும்பல இலட்சக்கணக்கானவர்கள் இன்று வயல் வெளிகளிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் கல்விச்சாலைகளிலும் உள்ளனர் - அழைப்பினை எதிர்நோக்கியபடி!

விவரமறியாதவர்களின் வெற்றுரையா அது?

'பொருளற்ற புகழுரை இது'- என்று எண்ணிவிட வேண்டாம். களம் பல கண்ட தளபதிகள் போற்றுகின்றனர் —புதுப்புது போர் முறைகளை அறிந்தவர்கள் பாராட்டுகின்றனர் —

"இந்தியப் படைகளிடம் எமக்கு எப்போதுமே பெருமதிப்பு உண்டு. இரண்டாம் உலகப் போரின்போது, இந்தியப் படைகள் பிரிவு ஒன்று, எரிட்ரியா களத்தில் நடத்திய வீரதீரமிக்கப் போரினை நான் கண்டிருக்கிறேன். அதே அணி, 'சேலா' முனையிலே தாக்குதலைத் தாங்கி நின்றது!

"பெரும்படைத் தலைவர் வேவல், இந்தியப் படைகளைச் சார்ந்த ஒரு தளபதிக்கு வெற்றிப் பதக்கம் அளித்த அரிய தோர் காட்சியை நான் கண்டிருக்கிறேன்."

என்று, அமெரிக்கத் தலைவர் ஹாரிமன் பாராட்டிப் பேசினார் — சின்னாட்களுக்கு முன்பு! விவரம் அறியாதவரின் வெற்றுரையா அது?

வீரப் போரின் தன்மைகளைக் கண்டறிந்தவரின் ஆய்வுரை — பாராட்டுரை; அதனையும் அவர் ஏன் கூறினார் என்பதுதான் கவனித்து மகிழத்தக்கதாகும்:-

"நாங்கள் படைக்கலன்களைத் தருகிறோம்; அவை தக்க முறையில் பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" என்றும் அவர் கூறினார்.

பிறரை நம்பிக்கிடப்பது நாட்டிற்குச் சிறப்பாகாது?

வெளிநாட்டினர் குறிப்பாக அமெரிக்காவும், பிரிட்டனும் புதுமுறைப் போருக்கும், நீண்ட காலத் தாக்குதலுக்கும் தேவையான படைக்கலன்களைத் தருகின்றன தங்கு தடையின்றி — வேகவேகமாக — விவரம் நேரில் வந்து கண்டறிந்தது! ஆயினும், நாமும் அவைகளை மட்டுமே நம்பிக்கிடப்பது இந்தப் பெரிய நாட்டின் சிறப்புக்கு அழகாகாது என்பதால், புதிய புதிய போர்க் கருவிகளை நமது தொழிற்சாலைகளில் வேகவேகமாகச் செய்து குவித்தபடி இருக்கிறோம்.

இயந்திர உருளைகளையும், கட்டிடத் தூண்களையும், வேறு பல தேவைப் பொருள்களையும் செய்துகொண்டிருந்த தொழிற்சாலைகள், இன்று துப்பாக்கியும் பீரங்கியும் தயாரிக்க முனைகின்றன!

போர்க் கருவிகள் படைப்பதில் திறமைமிக்க, க்ரூப் எனும் ஜெர்மானியத் தொழிலதிபர், சின்னாட்களுக்கு முன்பு இங்கு இந்தப் பிரச்சினைபற்றிக் கருத்தறிவித்து ஆதரவு காட்டியிருக்கிறார்.

என்றும் காணா எழுச்சியை இன்று நாம் காண்கின்றோம்!

பற்பல பண்டங்கள் செய்து வந்த தொழிற்சாலைகள் பலவும்,

இன்று போர்க் கருவிகள் செய்ய முனைந்துள்ளன.

தேவையை உணர்ந்து முன்பே பாடினார் பாரதியார் – 'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்' என்று!

வீரர்கள் திரண்டுவிட்டனர் – கருவிகள் குவிக்கப்படுகின்றன! களத்திலே கடும் போரிட இவை போதும்!

ஆனால், 'மக்கள் மனப்பாங்கு எங்ஙனம் உளது' என்றால், என்றும் காணாதது இது என்று எவரும் வியந்து பாராட்டத்தக்க எழுச்சியைக் காண்கிறோம்!

"பற்பல ஆண்டுகளாக, இது போன்றதோர் எழுச்சியை நான் கண்டதில்லை" என்று நமது முதலமைச்சர் காமராசர் கூறிப் பாராட்டுகிறார்.

மனமாச்சர்யம் மறைந்தது! ஒரே எண்ணம் மலர்ந்தது!

பூசல்கள் – புகைச்சல்கள் – கொள்கை வேறுபாடுகள் – முரண்பாடுகள் – அரசியல் கட்சி நடத்தும் கிளர்ச்சிகள் – கருத்துப் போர் – எனும் இவை யாவும் மறைந்துவிட்டன! அனைவருக்கும் ஒரே நோக்கம்–அது, 'நாட்டுக்கு வந்துள்ள பேராபத்தை நீக்குவது; சீனப் பகைவனை முறியடிப்பது' என்பதாகும்.

இந்தச் சீரிய பணிக்காகவே எந்தக் கட்சியும், தனக்குள்ள ஆற்றல் சக்தி நேரம் நினைப்பு, உழைப்பு உணர்ச்சி யாவற்றினையும் பயன்படுத்தவேண்டும் – என்ற பெரு நோக்கு, வெற்றி நடமிடுகிறது!

பொன்னும் பொருளும் திரட்டுவதிலும், போருக்கு வீரர்களை அழைப்பதிலும், குருதிக் கொடை தருவதிலும், நோக்கம் போக்கு விளக்குவதிலும், மக்கள் அணியைத் திரட்டுவதிலும், மாற்றான் பொய்யுரை மறுத்து மாய்ப்பதிலும் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

சனநாயக முறையின் வலிவும் பொலிவும்!

நாட்டுக்கு நெருக்கடி ஏற்படும் போது கட்சிப் பாகுபாடுகள் தாமாக மறைந்து, ஒன்றுபட்டுச் செயலாற்றும் பண்பு எழுவது தான் உண்மை சனநாயகத்தின் சீரிய தன்மையாகும்.

சனநாயக முறையின் வலிவும் பொலிவும், இந்தத் தன்மையைப் பொறுத்தே வளரும் – மிளிரும்!

'அய்யய்யோ–கட்சி வேலைகளே நடவாது போனால் கட்சிகள் மறைந்து போய்விடுமே' என்ற அச்சம் கொள்வோர், சனநாயகத்திலும், தத்தமது கட்சிகளின் உயிர்ப்புச் சக்தியிலும் நம்பிக்கை கொண்டவர்களாகார்!

சீனப் பகைவன் நாட்டைத் தாக்குகிறான் – அரசியல் கட்சிகளிலே ஏதோ ஒன்றின்மீது குறி பார்த்துத்தாக்குதலைநடத்தவில்லை – நாட்டைத் தாக்குகிறான்!

இதனைக் குறித்து, அரசியல் கட்சிகள்—தத்தமக்கு இனிக்கும் உயிர்க் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு — 'சீனப் பகையினை முறியடிப்போம்' என்று ஒரு பெரும் முழக்கம் எழுப்பி வருகின்றன !

கண்ணுக்குப் புலனாகாத வலிவுமிக்க படைக்கலன் !

'சர்வாதிகார நாடுகளிலே இது தானே முறை ?' என்று கேட்கின்றனர் —

அங்கு, இது முறை அல்ல — விதி — மீறமுடியாத விதி ! இங்கு அங்ஙனம் அல்ல — பொறுப்பை உணர்ந்து செயல்படும் அருந்திறன் !

மாடுமனை துறந்து, உற்றார் பெற்றோர் மறந்து, மாலையிட்ட மங்கையையும் மழலை பேசுங் குழவியையும் மறந்து, உயிரையும் இழக்கத் துணிந்து, மறவர்கள் களத்திலே நின்று போராடும் போது, சனநாயகத்தின் பேரால் இங்கு நாம் கட்சி மாச்சரியங் களில் ஈடுபட்டால் களத்தில் நிற்போர் இரத்தக்கண்ணீர் வடிப்பர் !

இதனை நன்கு உணர்ந்து இன்று அனைவரும், பொறுப்பு மிக்க போக்குடன் நடந்துவருகின்றனர்.

இது, கண்ணுக்குப் புலனாகாத—ஆனால் வலிவுமிக்க படைக்கலனாகும்.

எனவே, பகை முடிக்கவும், பழி துடைக்கவும், பலமிக்க நீண்ட காலத் தாக்குதலுக்கும் தேவையான சூழ்நிலை உருவாகிவிட்டது !

எழுச்சிக்கோலம் காட்டி நிற்கிறது இந்தியா !

இங்கே—வீறுகொண்டு எழுந்துள்ள வீரர்கள், தரம்மிக்க போர்க் கருவிகள், உற்பத்தியைப் பெருக்கும் தொழிற்சாலைகள் — ஆங்கு ஆர்வத்துடன் பணியாற்றும் பாட்டாளிகள், ஓயாது உழைக்கும் உழவர்கள், பொறுப்புணர்ந்த அரசியல் கட்சிகள், இதழ்கள், மாண்பு நிறை கற்றறிவாளர், 'ஈட்டிடும் பொருள் நாட்டுக்கே' என்பதை உணர்ந்துள்ள வணிகர்கள், தொழிலதிபர்கள்' வீரரை ஈன்றெடுத்த தாய்மார்கள், நல்லெண்ணத்தை நாளும் வழங்கிடும் நேசநாடுகள் — நாம் கண்டு களித்திடத்தக்க முறையிலே உள்ளன! எழுச்சிக்கோலம் காட்டி நிற்கிறது நாடு !

வீழ்ச்சிக்கோலத்துடன் விளங்குகிறது சீனு !

அங்கே சீனுவில் — "சர்வாதிகாரம், போர் வெறி, வெறுப்புணர்ச்சி, மிருக வாழ்க்கையில் மக்கள், எண்ண — எழுத — பேச உரிமையற்ற மக்கள் - உரிமையற்ற என்பது மட்டுமல்ல ; விருப்பமற்ற — திறமையற்ற — நேரமற்ற மக்கள், தகர்ந்து போன திட்டங்கள், உணவுப்

பற்றாக்குறை, குமுறிடும் நெஞ்சங்கள் — இவை உள்ளன" என்கிறார்கள் சென்று வந்தவர்கள்!

"உள்நாட்டிலே கிளம்பிய நெளியும் தோல்வியை மறைக்கவே, போர் வெறியை அந்த நாட்டுத் தலைவர்கள் கிளப்பிவிட்டிருக்கிறார்கள்" என்று கூறுகிறார்கள்.

சீன ராணுவ வெறியர்களின் நச்சு நினைப்பு!

சீனா வலிவு பெறும்போதெல்லாம், பிறநாடுகளின்மீது பாய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது!

உலகமே தமது காலடியில் விழத்தக்க வல்லமைபடைத்தவர்கள் தாங்கள் — என்ற நினைப்பு, சீனத் தலைவர்களுக்கு நீண்டகாலமாகவே இருந்துவந்திருக்கிறது!

மழைக்காக மகேசனை வேண்டிய சீன மாமன்னன் ஒருவன், "ஆண்டவனே! அடியேனை அவனியிலுள்ள மக்களுக்கெல்லாம் அதிபனாக்கி வைத்திருக்கிறீர்கள்; என் பிரார்த்தனை கேட்டு, மழை பெய்திட அருள் புரிவீர்" என்று பிரார்த்தனை செய்தானாம் — அவனிக்கெல்லாம் அதிபன்! நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு அல்ல— சென்ற நூற்றாண்டில்!

மண்ணாசை மட்டுமல்ல காரணம்...!

"இமயமலை அடிவாரம் தமக்குச் சொந்தமாக வேண்டும்; அங்குக் காலூன்றிக்கொண்டு இந்தியாவை அடிமைகொள்ள வேண்டும்; பிறகு ஆசியாவைத் தன் ஒருகுடையின்கீழ்க்கொண்டு வர வேண்டும்" என்ற நச்சு நினைப்பு, சீன இராணுவ வெறியர்களுக்கு இருக்கிறது!

நமது மாநில கவர்னர் மேதி அவர்கள், "சீனாவின் நோக்கம், சிறுகச்சிறுக இந்தியாவை விழுங்கிவிடவேண்டும்; பிறகு தென்கிழக்கு ஆசியாவை ஆட்டிப்படைக்க வேண்டும்" என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார்.

"மண்ணாசை மட்டுமா காரணம்—சீனப் படையெடுப்புக்கு" என்றால், இல்லை! மண்ணாசையுடன் வேறு ஓர் நோக்கமும் இருக்கிறது — அது, 'இந்தியாவிலே வெற்றிகரமாக நடைபெற்றுவரும் சனநாயகமுறைக்கு வேட்டு வைத்துத் தகர்த்துவிட்டு ஆசியா முழுவதிலும் சர்வாதிகார முறையைப் புகுத்தவேண்டும்' என்பதும் ஆகும்.

"விரும்பிப் பாடுபட்டு, நமக்கென்று ஒரு வாழ்க்கை முறையை நாம் செய்துகொண்டிருக்கிறோம்! அதனைக் கிழித்தெறிந்து பாழ்ப்படுத்தி, தான் மேற்கொண்டுள்ள வாழ்க்கை முறையைத் திணிப்பதே சீனாவின் நோக்கம்."

என்று பண்டித ஜவகர்லால் நேருவின் உடன்பிறந்தார் திருமதி விஜயலட்சுமி அம்மையார், விளக்கம் அளித்திருக்கிறார்.

சீனா — பொதுவுடைமை நாடு சர்வாதிகார அரசியல் முறையை மேற்கொண்டுவிட்டிருக்கிறது. அதற்காக நாம் சீனாவிடம் வெறுப்புக் கொள்ளவில்லை — விரோதம் காட்டவில்லை — கூடி வாழும் கோட்பாட்டை மதித்து, விரும்பி ஏற்று நடந்துகொண்டிருக்கிறோம். ஆனால் சீனாவின் போக்கு அவ்விதமில்லை; சனநாயக முறையை ஒழித்துக் கட்டுவதைச் சீனா, தன் புனிதக் கடமையாகக் கொண்டிருக்கிறது — இதிலே ஒளிவு மறைவு இல்லை என்றே கூறலாம்.

'இந்திய சனநாயகத்தை அழிக்கவே திட்டமிட்டு சீனா படையெடுப்பு நடத்துகிறது' என்பர் பலர்; மறுக்கவும் உளர், சிலர்!

திட்டம் எதுவாக இருப்பினும், சீனா வெற்றிபெற்றால் — விளைவு, சனநாயக அழிவாகத்தான் இருக்க முடியும் என்பதிலே எவருக்கும் ஐயம் எழாது!

நாம் உணர்ந்து பெருமைப்படத்தக்க ஒரு பேருண்மையை, இந்த நேரத்தில் நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தியாதான், உலகிலேயே மிகப்பெரிய சனநாயக அமைப்பு. ''புதிய சனநாயகம் — எளியோர் நிரம்பிய சனநாயகம்'' என்று கூறுவர்; இருக்கலாம்.

ஆனால், 'இதுதான் உலகிலேயே மிகப் பெரிய அளவிலே நடைபெற்றுவரும் சனநாயக அமைப்பு' என்பது மறுக்க முடியாத உண்மையாகும்; இந்த அமைப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தி, சீனா அதனைக் குலைத்து விடுமானால், பிறகு ஆசியாவிலேயே சனநாயகம் இல்லை! உலகிலேயே சனநாயக அமைப்பினிடம் நம்பிக்கை நசித்துப் போய்விடும்!

ஜனநாயக நாடுகள் திரண்டெழுந்து நிற்கின்றன!

எனவே, நாம் மேற்கொண்டுள்ள போர், நாட்டு உரிமையையும் தன்மானத்தையும் பாதுகாப்பதில் மட்டுமல்ல — மறைந்த மாமேதை உட்ரோ வில்சன் எனும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் சுட்டிக்காட்டியபடி — 'சனநாயகத்தை வாழவிடும் விதமாக உலகை அமைத்திடும் இலட்சியத்திற்காகவும் இந்தப் போர் நடைபெறுகிறது' என்று கூற வேண்டும்.

ஆகவேதான், சனநாயகப் பண்பையும், பார்லிமெண்டரி சனநாயக ஆட்சி முறையையும் மதித்துக் கடைபிடித்துவரும் நாடுகள் யாவும், இந்தியாவுக்குத் துணைநிற்க முனைகின்றன!

மலாய் நாட்டுப் பிரதமர், துங்கு அப்துல் ரகிமான் சனநாயகப் பாதுகாப்பு நிதி திரட்டும் தொண்டாற்றுகிறார்!

விடுதலை வீரர் மகாரியாஸ் பாதிரியார், இந்தியாவின் நோக்கத்தைப் பாராட்டுகிறார் — ஆதரவு காட்டுகிறார்!

நாஜிகளை எதிர்த்ததால் சிறைப் படுத்தப்பட்ட மேற்கு ஜெர்மன் தலைவர் லூப்கே ஆதரவு காட்டுகிறார் !

கேரள மாநில கவர்னர் கிரி அவர்கள் கூறியிருப்பதுபோல — சனநாயக நாடுகள் யாவும் திரண்டெழுந்து ஒன்றாக நிற்கின்றன !

'கூட்டுச் சேராக் கொள்கை'யைத்தான் கடைபிடித்து வருகின்றார் பண்டித நேரு; எனினும், 'கூட்டுச் சேராத நேருவுக்கு நாம் ஏன் உதவவேண்டும்?' என்று சனநாயக நாடுகள் — குறிப்பாக அமெரிக்காவும், பிரிட்டனும்—நினைக்கவில்லை; மாறாக, துணை நிற்கின்றன! நிபந்தனையற்று உதவி செய்கின்றன !

"கூட்டுச் சேராக் கொள்கை சரியா முறையா என்று, இதுபோது வாதாடிக்கொண்டிருக்கத் தேவையில்லை; போர்ச் சூழ்நிலை அத்தகைய விவாதத்தை, பசையும் ருசியும் அற்றதாக பயனும் பொருளும் அற்றதாக ஆக்கிவிட்டது" என்று அந்தப் பெரிய சனநாயக நாடுகள் கருதக்கூடும்.

ஆனால் அந்த நாடுகள், நேசக் கரத்தை நீட்டி ஆதரவு அளிப்பதன் மூலம், 'பெருநிலை பெற்ற நாடுகளிடம் சிறுமதி எழாது' என்ற பேருண்மையை நிலைநாட்டி பல கோடி மக்களின் நன்றியறிதலைப் பெற்றுவிட்டன.

கூட்டுச் சேராக் கொள்கையை நாம் விட்டுவிடவில்லை. ஆனால், நேரு அவர்கள் சின்னாட்களுக்கு முன்பு கூறியுள்ளபடி, ஒரு பொது நோக்கத்திற்காக சனநாயக நாடுகள் நெருங்கிவந்து ஒன்றாக நிற்கின்றன !

இலண்டனிலுள்ள இந்தியத் தூதரக முதல்வர் சக்ளா அவர்கள், 'கடைசியில், யார் நம்முடைய உண்மையான நண்பர்கள் என்பதை உணர்ந்து கொண்டு விட்டோம்' என்று கூறியுள்ளார் — பெருமிதத்துடன் !

நிலைமையை எண்ணுகையில் உள்ளம் வெதும்புகிறது !

'கூட்டுச் சேரவில்லையே' என்பது பற்றி மனக்குறையைக் காட்டாமல், சனநாயக நாடுகள் உதவி செய்கின்றன ! இந்தச் சீரிய போக்குடன், சீனா மேற்கொண்டுள்ள போக்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உள்ளம் வெதும்பத்தான் செய்கிறது !

கனிவு காட்டியதெல்லாம் கனவாகிப் போயிற்று !

எத்தனை கனிவு காட்டினார் சூ—யென்—லாய் ! என்னென்ன புகழுரைகள்! எத்தனை வசீகரமான புன்னகை! எங்குச் சென்றாலும்—எவரைச் சந்தித்தாலும், 'பண்டித நேரு சமாதானப் பிரியர் என்றால் சமாதானப் பிரியர் தான்' — என்ற கருத்துப்பட சிந்து பாடினார். சூ—யென்—லாய் !

அவரை அன்புடன் அழைத்து புதுடில்லியில் பாராளுமன்றத்தினருக்குப் பேருரை நிகழ்த்தச் செய்தனர்; "இந்தியா போன்ற

பெருமைபெற்ற நாடு எமக்கு அண்டை நாடாக இருப்பது எமக்குப் பெருமையளிக்கிறது" என்று சூ-யென்-லாய் பேசிடக் கேட்டோர் மனதிலே, களிப்பு கொந்தளித்தது! அந்த நாட்களையும், நாமாவளியையும் சூ—யென்-லாய் அறவே மறந்துபோனார்!

"எத்துணை பெரிய நாடு! எத்துணை எத்துணை விளக்கங்கள்! கலையின் மாண்புதான் என்னே! எல்லாவற்றையும்விட மேலாகச் சீனாவிடம் இந்தியா கொண்டுள்ள நட்பும் நல்லுறவும் எத்துணை நேர்த்தியானது? இவைகளை எப்போதாவது மறக்கமுடியுமா?" என்று கேட்டார் பேருரை ஆற்றுகையில்!

இப்போது சூ-யென்—லாயைக் கேட்கலாமா என்று கூடத் தோன்றுகிறது - "சூ-யென்—லாய் அவர்களே! 'மறக்கவே மாட்டோம்' என்று அன்று பேசினீர்களே; இப்போது, நேசம்—நல்லுறவு- பஞ்சசீலம் போன்றவைகளை எல்லாம் மறந்துவிட்டீர்களே! 'எத்துணை பெரிய நாடு-எத்துணை வளங்கள்' என்ற இரண்டு விஷயங்களை மட்டும் தான் மறக்காமல் இருக்கிறீர்! அப்படித்தானே மாஜி நண்பரே!" என்று கேட்கத் தோன்றுகிறது!

மக்களின் மனவளத்தை அன்று காணவில்லை—இன்று காண்கிறார்!

சூ—யென்-லாய் இங்குள்ள எல்லா வளங்களையும் கண்டு வியந்தார்! ஆனால் மக்களின் மனவளத்தை மட்டும் கண்டறியவில்லை அப்போது! இப்போது ஓரளவு உணருகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது!

இந்த நாட்டிலே இலட்சக் கணக்கான வீரர்கள் இரத்த ஆறுகளிலே தள்ளப்படுவதாயினும் — இன்னுயிரை இழக்க நேரிடினும் கலங்காதுபோரிட்டு, நாட்டு உரிமையையும் தன்மானத்தையும் பாதுகாத்துத் தருவது என்ற உறுதிபூண்டிருக்கிறார்கள்!

துவக்கத்திலே நம்மைத் தாக்கிய தோல்விகளைக் கண்டதால், சீனத் தலைவர் வீண்மனப்பால் குடிக்கவேண்டாம்!

வீணுரை அல்ல விவேகம் நிறைந்தது; வியப்புக்குரியது!

பிரிட்டிஷ் முதலமைச்சர் மாக்மில்லன் கூறியதுபோல — துவக்கத்திலே துவள நேரிட்டது, இறுதி வெற்றிக்கான உறுதியான அறிகுறிகள் ஆகும்!

'நான்கு நல்ல வார்த்தை சொல்லலாம்' என்பதற்காக, மாக்மில்லன் இதுபோலப் பேசினார் — என்று எண்ணுபவர்கள் வெறும் ஏமாளிகள்!

மிகப் பயங்கரமான உலகப் போரிலே நம்மைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான ஆயுத பலம் படைத்த இங்கிலாந்து, துவக்கத்திலே கண்ட தோல்விகளையும் இறுதியிலே வெற்றி

(29-ம் பக்கம் பார்க்க)

நோய்களை ஒழிக்கப் புது ஆயுதம்—என்ஸைம்

அமெரிக்காவில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் பெரிய விஷயங்களில் "என்ஸைம்—நோய்களைக் குணப்படுத்த அதன் உபயோகம்" என்பதும் ஒன்று. ஏற்கனவே மருந்து தயாரிப்பாளர் சில என்ஸைம்களைத் தயாரித்துள்ளனர். இவைகளை மருத்துவர்கள் பயன்படுத்தி, நல்ல பலன்களையும் கண்டுள்ளனர்.

என்ஸைம் என்பது பெரிய புரதமூலக் கூறுகளாகும். உயிருள்ளவை அனைத்திலும், கிருமியிலிருந்து தாவரங்கள் வரையிலும், பிராணிகளிலும், மனிதர்களிலும் இந்த என்ஸைம்கள் இருக்கின்றன. அண்மையில் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக உயிர் வாழ்தலின் எல்லாச் செயல்களிலும் உணவு, ஜீரணம், வளர்ச்சி, தசைநார்களின் சுருக்கம், இனவிருத்தி, நரம்புகளின் இயக்கம், இன்னும் பற்பல காரியங்களிலும் என்ஸைம்கள் தான் மிகப் பிரதான பங்கை ஏற்கின்றன என்று கண்டு கொள்ளப்பட்டது.

செய்கையைத் தூண்டுவது என்ஸைம். உடலின் உயிர் அணுக்கள் தாம் என்ஸைம்களை உற்பத்தி செய்கின்றன. ரசாயன கிரியையை ஊக்குவிப்பதன் மூலக் கூறுகளின் சேர்க்கையால், புதிய பொருள்கள் உண்டாவதைச் சாத்தியமாக்குகின்றன என்ஸைம்கள். இவை இல்லாவிடில் ரசாயனக் கிரியை ஏற்படாது. எடுத்துக்காட்டாக, உட்கொள்ளப்பட்ட உணவுகள் அனைத்தையும் என்ஸைம்கள் அவற்றின்மீது வேலை செய்யும் வரை ஜீரணிக்க முடியும். பல பொருள்கள் கூட்டாக இருக்கும் உணவை உடம்பில் ஓடும் ரத்தம் கிரகித்துக்கொள்ளக் கூடிய வகையில் எளிய பொருளாகப் பிரிக்க முடியும். என்ஸைம்கள் இல்லாவிடில், நாம் எவ்வளவு தான் உணவை விழுங்கினாலும், அதிலிருந்து நமக்கு யாதொரு ஊட்டமும் கிட்டாது.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றதையும் கண்டு கூறுகிறார்-வீணுரை அல்ல !

"பாகிஸ்தான் பிரச்சினையிலே இன்று, ஓர் மகிழத்தக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருநாட்டுத் தலைவர்களும் கூடிப்பேசி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவு செய்துவிட்டனர். நமக்குக் கிடைத்துள்ள புதிய, வலிவுமிக்க படைக்கலன் என்றே இதனைக் கருதலாம் - களிப்படையலாம்."

—"நம் நாடு."

உணவை ஜீரணம் செய்யும் பணியில் என்ஸைம்கள் ஆயிரக் கணக்கான ரசாயன மாற்றங்களை ஒரு இமைப் பொழுதில் செய்கின்றன. இதே ரசாயன மாற்றங்களை ஒரு ஆய்வுக் கூடத்தில் செய்வதாக இருந்தால், பல மணி நேரம் செய்ய வேண்டியிருக்கும்.

புதிய பொருள்கள்

என்ஸைம்கள் பல கூட்டுப் பொருள்களை எளிய பொருள்களாகப் பிரிப்பதுமல்ல, புதுசகப் பொருள்களையும் உண்டு பண்ணுகின்றன. எடுத்துக்காட்டாக, இறைச்சியிலிருந்து கிட்டும் அமைனு அமிலங்களை ரத்தத்திலிருந்து இந்த என்ஸைம்கள் எடுத்து தசைகளை வளர்க்கப் பயன்படுத்துகின்றன. தசைகள் யாவும் வேருன பொருள்கள். சர்க்கரையை கிளைக்கோஜன்னுக மாற்றுகின்றன என்ஸைம்கள். கல்லீரலில் கிளைக்கோஜன்னைச் சேமித்து வைக்கின்றன. தேவை ஏற்படும்போது, சக்தியைக் கொடுக்கவே இது சேமித்து வைக்கப்படுகிறது.

லட்சக் கணக்கில்...

மனித உடலில் லட்சக் கணக்கான பல்வேறு என்ஸைம்கள் இருக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். உடலில் நடக்கும் ஒவ்வொரு கிரியைக்கும் வெவ்வேறு என்ஸைம் இருக்கிறது என்கிருர் டாக்டர் டேவிட் இ. கிரின். இவர் விஸ்கான்ஸின் என்ஸைம் கழகத்தைச் சேர்ந்தவர்.

என்ஸைம்களின் ஆற்றல் மிகவும் வியப்பாக இருக்கிறது. ஒரு சிறு அளவு என்ஸைம்கள் செய்யும் வேலை வியப்பில் ஆழ்த்துகிறது. பெப்ஸின் என்பது வயிற்றிலுள்ள என்ஸைம் ஆகும். இது இறைச்சியை ஜீரணிக்கிறது. ராக்பெல்லர் மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் இதைத் தனியாகப் பிரித்து எடுத்தார். ஒரு ராத்தல் பெப்ஸின் 30 டன் இறைச்சியை ஏறத்தாழ இரண்டு மணி நேரத்தில் ஜீரணம் செய்து விடும் என்று கூறுகிறது இக் கழகம். இதே அளவு என்ஸைம் 10 லட்சம் காலன் பாலைச் சில நிமிஷத்தில் உறைய வைத்து விடுமாம்.

சில என்ஸைம்கள் எரிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவை. மிகச் சிறிய உணவுப் பொருளை இவை எரித்து, பலப் பல ரசாயன கிரியைகள் மூலம் விஞ்ஞானிகளுக்குத் தெரிந்த மிக அபூர்வப் பொருள்களில் ஒன்ருக மாற்றி விடுகின்றன. இந்தப் பொருளின் பெயர் அடினோஸின் டிரிபாஸ்பேட் எடிபி என்று சுருக்கமாகக் கூறப்படுகிறது. எடிபி ஒரு மிகச் சிறிய மின்கலம் என்று கூறலாம். இது தசை நார்களைச் சுருக்குவதற்குச் சேகரித்து வைத்துள்ள சக்தியைக் கொடுக்கிறது ஒருவருடைய இருதயத் துடிப்புக்கும்

கண் சிமிட்டலுக்கும் அல்லது மூச்சு விடுவதற்கும் வேண்டிய சக்தியைக் கொடுப்பது எடிபி ஆகும்.

தாவரங்கள், காளான்கள், கிருமிகள், மானிட ரத்தம் முதலியவற்றிலிருந்து இப்போது என்ஸைம் எடுக்கின்றனர் அமெரிக்க மருந்து தயாரிப்பாளர்கள். இந்த என்ஸைம்கள் சவுகரியமான விதங்களில் மருத்துவர்களுக்குக் கிட்டுகின்றன.

லெடர்ஸ் லாபரட்டரீஸ் என்ற ஒரு மருந்து தயாரிப்புக் கம்பெனி விற்பனை செய்துவரும் ஒரு என்ஸைம் மரணத்திற்குக் காரணமாக இருக்கும் மாரடைப்பை உண்டு பண்ணும் ரத்த உறைவுகளைக் கரைப்பதில் மிகவும் பயனளிப்பதாக இருக்கிறது. நியூஜெர்ஸி மாநிலத்தில் ராரிடனிலிருக்கும் ஆர்தோ ஆராய்ச்சி நிலையம் மானிட இரத்தத்திலிருந்து இன்னொரு என்ஸைமைப் பிரித்துள்ளது. இது கால்களில் ரத்தக் குழாய்களில் ரத்த உறைவுகளைக் கரைக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நியூயார்க் பல்கலைக்கழகத்திலும், மிஸ்ஸௌரியில் ஸெயின்ட் லூயியிலிருக்கும் வாஷிங்டன் பல்கலைக் கழகத்திலும் செய்த ஆராய்ச்சிகளால் இந்த என்ஸைம்கள் மிகவும் பயனளிப்பவையாக இருக்கும் எனக்கண்டு கொள்ளப்பட்டது.

இழுப்பு, கபஜுரம், இன்னும் நுரையீரல் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தும் கிருமி எதிர்ப்பு மருந்துகளின் ஆற்றலை பல் வேறு என்ஸைம்கள் அதிகரிக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கண் நோய் அறுவை மருத்துவத்தில் கண் மருத்துவர்கள் இன்னொரு வகை என்ஸைமைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். இது அறுவை மருத்துவத்தைச் சுலபமாக்குகிறது. நூற்றுக் கணக்கான நோயாளிகள் விஷயத்தில் இது சிறந்த பலனளித்துள்ளது.

"ஹையாலுரனிடேஸ்" என்ற என்ஸைமைக் கொண்டு ஓரே ஒரு ஊசி போடுவதன் மூலம் தாங்க முடியாத வலியுடன் கூடிய வீக்கங்கள் விரைவில் வடிந்து விடுகின்றன. கணுக்காலில் நரம்புப் பிசகுக்கு இது சிறந்தது. சிறுநீரகத்தில் அடைத்துக் கொள்ளும் கற்களை நீக்கப் பயனுள்ளதாக இருக்கிறது. இதனால் அறுவை மருத்துவம் இதற்குத் தேவையில்லை.

என்ஸைமே காரணம்

இல்லாமல் போன அல்லது கோளாறான என்ஸைம்களினால் தான் எல்லா நோய்களும் ஏற்படுகின்றன என்று இன்று பல மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வந்துள்ளனர். உடலில் ஒவ்வொரு என்ஸைமின் உற்பத்திக்கும் குறிப்பிட்ட நுட்ப அணு இருக்கிறதென்றும் இந்த அணு இல்லாமலோ அல்லது குறைபாடுடன் இருக்

தாலோ, என்ஸைமும் அதே மாதிரியாகி விடுகிறது என்றும் கூறுகின்றனர்.

நீரிழிவு

பான்கிரியாஸ் என்ற கணையத்தில் இன்சுலின் என்ற கணைய நீர்மம் சுரப்பதற்குக் காரணமான என்ஸைம் இல்லாமல் போவது நீரிழிவு நோய்க்குக் காரணமாக இருக்கும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சோகை, புற்று நோய்கள் முதலியன என்ஸைம் கோளாறினால் ஏற்படுகின்றன என்பதற்குச் சான்றுகள் அதிகரித்து வருகின்றன.

இந்தக் கண்டுபிடிப்புகள் ஒரு உண்மையை நிரூபிக்கின்றன. என்ஸைம்கள் இல்லாமலோ அல்லது கோளாறுகவோ இருந்தால், செயற்கை அல்லது மனிதனால் செய்யப்பட்ட என்ஸைம்களைப் பயன்படுத்துவது சாத்தியமாகும். இதே போல், ஏதாவது என்ஸைம்கள் அளவுக்கு அதிகமாகச்செயல்படுவதாகஇருந்தால், அவைகளை ரசாயனப் பொருள்கள் கொண்டு கட்டுப்படுத்துவதும் சாத்தியமாக இருக்கும்.

அமெரிக்க மருத்துவச் சங்க வெளியீடான 'டுடேஸ் ஹெல்த்' என்ற பத்திரிகையில் இதைப் பற்றி ஜே. டி. ராட்கிளப் என்பார் எழுதுகையில் கூறுவதாவது: "புற்று நோய் அணுக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்ஸைம்களைத் தெரிந்து கொண்டு விட்டால், அவைகளை நீக்கிவிட வழி கண்டுபிடிக்கப்படலாம். இதைச் செய்தால் புற்று நோய் சிகிச்சை உறுதியாகும்."

என்ஸைம், மருத்துவத் துறையில் பெரும் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

—"நல்வழி."

சிந்தனைச் செல்வங்கள்

(தொகுப்பாளர் :— துரை. முருகேசன்)

பலகாரங்களின் மேல்கூடு அரிசி மாவினால் செய்யப்பட்டிருக்கும்; அவைகளின் உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் வேறுவேறு விதமானவையாக இருக்கும். உள்ளிருக்கும் பொருளுக்கு ஏற்பப் பலகாரங்கள் நல்லவையாகவோ கெட்டவையாகவோ இருக்கும். அதுபோல் மானிட சரீரங்கள் எல்லாம் ஒரே விதமான பொருளால் ஆக்கப்பட்டிருப்பினும் இருதய சுத்தத்திற்கு ஏற்றபடி மனிதர்கள் வித்தியாசப்படுவர்.

—பரமஹம்சர்.

தீமைகளைத் தாங்குபவர்களை விட நன்மைகளைத் தாங்குபவர்களுக்குப் பெரும் பண்புகள் தேவைப்படுகின்றன.

—பிளேவல்.

கல்வித்துறைச் செய்திகள்

80 சதவீதக் கல்லூரி மாண வர்களுக்கு இராணுவப்பயிற்சி

தமிழ்நாட்டு அரசாங்கத் திட்டம்

கல்லூரி மாணவர்களில் நூற்றுக்கு 85 பேர்களுக்கு உடனடியாக இராணுவப் பயிற்சி அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அடுத்த ஆண்டில் தகுதி பெற்ற எல்லா மாணவர்களும் என். சி. சி. படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தற்சமயம் 35 ஆயிரம் மாணவர்கள் (பெண்கள் உள்பட) இருக்கிறார்கள். அவர்களில் சுமார் 30 சதவிகிதத்தினரே தற்சமயம் என். சி.சி. பயிற்சி பெற்று வருகின்றனர்.

எல்லா மாணவர்களும் பயிற்சி பெறத் தேவையான சாதனங்களை (உடுப்பு, ஆயுதம் போன்றவை) பெறுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

பட்டப்படிப்புக்கு மேல்படிப்பு படிப்பவர்கள், கடைசி ஆண்டு மாணவர்கள், வைத்திய என்ஜினியரிங் கல்லூரிகளில் 4வது அல்லது 5வது ஆண்டு படிப்பவர்களுக்கு விலக்களிக்கப்படும்.

தலைமையாசிரியர் பதவிக்குத் தமிழ்ப் பண்டிதர்கள்

தகுதிகளை நிர்ணயித்து அரசாங்கம் உத்தரவு

கிரேடு 1 தமிழ்ப் பண்டிதர்களும், செக்ரடேரியல் அஸிஸ்டெண்டுகளும் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்குத் தகுதியுள்ளவர்கள் என்றும் அவர்களது பெயர்களையும் பரிசீலனைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் அவர்கள் ஒரு மொழியிலோ அல்லது ஒரு பாடத்திலோ பட்டம் பெற்றவர்களாகவும், ஆசிரியர் பயிற்சியில் பட்டம் பெற்றவர்களாகவும், உயர்நிலைப் பள்ளியில் ஐந்து ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களாகவும் இருக்கவேண்டும். இத்தகைய தகுதிகள் உள்ளவர்களைத் தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கலாம்.

மாணவர்க்குத் தேசீய ஒழுக்கக் கட்டுப்பாடு போதனை

ஒரு கோடி பேருக்குப் பயிற்சி தர ஏற்பாடு

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்குத் தேசிய ஒழுக்கக் கட்டுப்பாடு உடற்

பயிற்சிப் போதனை அளிப்பதற்காக, ஆறாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரையில், ஒவ்வொரு வாரமும் ஐந்து பீரியட்கள் உடனடியாக ஒதுக்கப்பட வேண்டும் என்று நடுத்தர, உயர்தர, உயர்தர செகண்டரி பள்ளிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கும்படி யூனியன் கல்வி அமைச்சு எல்லா ராஜ்ய சர்க்கார்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்கீழ் மொத்தம் சுமார் ஒரு கோடி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 6 கோடி செலவாகும். இச்செலவு முழுவதையும் இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள்.

விஞ்ஞான பாட போதனைகளை விரிவுபடுத்தவும்

மாநில அரசுகளுக்கு மத்திய கல்வி அமைச்சு சுற்றறிக்கை

சீனப் படையெடுப்பால் இப்போது ஏற்பட்டுள்ள தேவைகளைச் சமாளிப்பதற்கான முறையில் கல்வித்திட்டங்களை மாற்றியமைக்கும்படி ராஜ்ய அரசுகளை மத்திய கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. பி. என். கிருபால், ராஜ்ய அரசுகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இம் மாதிரி கல்வித் திட்டங்களை மாற்றி அமைப்பதில் கல்வி அபிவிருத்தி இலட்சியம் பாதிக்காமல் இருக்கும்படியும், பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான கல்வி நடவடிக்கைகளை வலுப்படுத்தும்படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மாணவர்களை ஒழுங்கும் கட்டுப்பாடுமாக ஆசிரியர்கள் தலைமையில் இயங்கிப் பாதுகாப்புத் துறை ஏற்பாடுகளுக்குப் பயன்படும் முறையில் நடக்கச் செய்ய வேண்டும் என்றும் யோசனை தெரிவித்திருக்கிறார். மற்றும் விஞ்ஞானக் கல்வி விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும், விஞ்ஞான ஆசிரியர்கள் ஓய்வு வயதை அதிகரிக்க வேண்டும் என்றும், ஓய்வு பெற்றவர்களில் தகுதியுள்ளவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம் என்றும், இளைஞர்களுக்குக் குறுகியகால ஆசிரியர் பயிற்சி அளித்து ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்றும் இந்தச் சுற்றறிக்கையில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன ஆக்கிரமிப்பு வளர்ந்த வரலாறு

பழத்தில் ஊசியை இறக்குவதைப் போலப் பொய்யைத் திரித்து உண்மையெனக் காட்டிவரும் சீன சர்க்காரின் கபட நாடகத்தை நமது வெளி விவகார இலாகா அதிகாரி ஒருவர் 27-11-62 அன்று அம்பலப்படுத்தினார். இந்திய சர்க்கார் தான் எல்லைப் பிரச்னையை இழுத்தடித்து வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டு உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தியா—சீனா எல்லை விவகாரத்தைப் பற்றிச் சீன சர்க்கார் கூறி வரும் பொய்கள் ஒவ்வொன்றையும் அவர் பலத்த ஆதாரத்துடன் விளக்கியுள்ளார்.

இந்தியா-சீனா எல்லைப்பிரச்னை என்று ஒரு பிரச்னையே இருக்கவில்லை. 1957—ல் சீனர்கள் தான் அதை முதலில் சிருஷ்டி செய்தார்கள். இரண்டு வருடத்திற்குப் பிறகு இந்தியாவில் உள்ள பல பிரதேசங்கள் தங்களுக்குச் சொந்தமானவை என்று பாத்தியதை கொண்டாடினார்கள்.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், 1959 செப்டம்பர் 8—ந் தேதிக்குப் பிறகுதான் இந்தியாவில் 50,000 சதுர மைல் வட்டாரம் தங்களுடையது என்று உரிமை கொண்டாடினார்கள்.

இந்த உரிமை கொண்டாடும் பிரதேசங்கள் இன்னின்னவை என்பதை 1960—ல் இரு நாடுகளின் அதிகாரிகள் கூடிப் பேசிய போதுதான் அவர்கள் முதன் முதலாகக் குறிப்பிட்டார்கள்.

அண்மையில் சீனப் பிரதம மந்திரி சூ—என்—லாய் பல நாடுகளின் தலைவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார் அல்லவா? அதில் (லடாக்) அக்ராய்சின் பகுதியில் தங்களுக்குப் பாத்தியதை உண்டு என்று கூறியிருக்கிறார். இந்தப் பகுதி வழியாகத் தான் சீனப் படை 1950—ல் திபேத்தை விடுவித்தது என்றும் கூறியிருக்கிறார்.

அவர்களுடைய கூற்றுப்படி லடாக்கில் முதன் முதலில் அவர்கள் உரிமை கொண்டாடிய காலம் 1950 ஆகும். அவர்களுடைய "நியதிப்படி" ஒரு பிரதேசத்தில் பாத்தியதை உண்டென்பதை நியாயப்படுத்த 12 ஆண்டுக்காலம் போதுமென்று எண்ணுகிறார்கள் போலும். ஆனால், இந்தியாவுக்கு 48 ஆண்டு கால உரிமை இருக்கிறது. 1914-ம் ஆண்டு உடன்படிக்கை முதற்கொண்டு அந்தப் பகுதியில், இந்தியா தான் நிர்வாகத்தை நடத்தி வருகிறது. சீனர்களுக்கு அவர்களுடைய வாதத்தை மெய்ப்பிக்க 12 ஆண்டுக் காலம்போதுமானது; ஆனால், இந்தியாவுக்கு 48 ஆண்

டுக் காலம் உரிமை இருந்தும் அது போதாது என்கிறார்கள் சீனர்கள்.

அந்த அதிகாரி சீனப் படையெடுப்புகளைப் பற்றியும் விளக்கினார்.

கடந்த ஐந்தாண்டுக் காலமாகச் சீனர்கள் தொடர்ந்து மெது மெதுவாக இந்தியப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டு வந்திருக்கின்றனர். பலாத்காரத்தில் இறங்கிப் பல பகுதிகளை அபகரித்திருக்கின்றனர். தொன்னெடுங்காலமாக இருந்து வந்த நிலைமையை ஆக்கிரமிப்பால் மாற்றியிருக்கின்றனர்.

1957-58-ல் அக்ஸாய்சின் பகுதியில் நாம் சாலைப் பராமரிப்பு நடத்தி வந்த இடத்தில் சீனர்களின் காவல் படையினர் இந்திய ரோந்துப் பிரிவு ஒன்றைப் பிடித்துக் கொண்டனர்.

1959-ம் ஆண்டுத் துவக்கத்தில் அவர்கள் சாஸ்செனமோ ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள கோங்கா கணவாய் வரை வந்து விட்டனர். அதே ஆண்டு அக்டோபரில் சீனப் படையினர் இந்திய ரோந்து கோஷ்டி ஒன்றைத்தாக்கி ஒன்பது பேரைக் கொன்று மற்றவர்களைப் பிடித்துச் சென்றனர்.

இந்த மோதல்கள் பற்றி இரு நாடுகளின் பிரதம மந்திரிகளும் நடத்திய கடிதப் போக்குவரத்தில்தான் 1959 செப். 8-ந் தேதியன்றுதான், சீனப் பிரதமமந்திரி இந்தியப் பிரதேசத்தில் 50,000 சதுரமைல் தங்களுக்குச் சொந்தமானது என்ற பாத்தியதையை நுழைத்திருந்தார்.

அதற்குப் பிறகும்கூட சமரசமாக எல்லைப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று சொல்லிக்கொண்டு மேலும் பல இந்தியப் பகுதிகளை அபகரித்தனர்.

1960 ஏப்ரலில் இரு பிரதமர்களும் சந்தித்துப் பேசினர். அப்போது அதிகாரிகள் மட்டத்தில் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நேரத்தில் சீனர்கள் பாங்காங் ஏரிப் பகுதியில் நுழைந்தனர்.

ஜூன் மாதம் அதிகாரிகள் கூடிப் பேசிக்கொண்டிருந்த போதும் கூட சீனர்கள் மீண்டும் அதே பகுதியில் புகுந்தனர். 1960 அக்டோபரில் சீனப் படையொன்று சாஸ்செனமோ பள்ளத்தாக்கில் தலைகாட்டிற்று.

இப்படியாக 1961 மத்தியில் சீனப் படைகள் 1958-லிருந்த இடத்திலிருந்து தென் மேற்காக 70 மைல் தூரம் இந்தியப் பிரதேசத்திற்குள் நுழைந்துவிட்டனர். அதன் பிறகு சிப்சாப் நியாக்ஜூ தம்புரு முதலிய இடங்களில் காவல் நிலையங்களை அமைத்து அந்தப் பகுதிகளை இணைக்கும் ரோடுகளை அமைத்துக் கொண்டனர்.

1962-ல் சும்டோ என்னுமிடத்தில் இராணுவ முகாம் ஒன்றை நிர்மாணித்துக்கொண்டு

காராகாஷ் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு ரோடையும் சீர்படுத்தினார்கள். 1962 ஜூலைக்கும் செப்டம்பருக்கும் இடையில் மாத்திரம் 32 புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்திக்கொண்டனர்.

இதை அவர்கள் வேறு விதமாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். 1959 நவ. 7-ந் தேதி நிலைக்குத் திரும்புவதாயிருந்தால் இந்தப் பகுதியில் 6000 சதுர மைல்களை விட்டுவிட நேரிடும் என்று சமீப அறிக்கையில் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நேபாவில்

1962 செப்டம்பர் 8-ந் தேதி சீனர்களின் ஆக்கிரமிப்பு நேபா பகுதியிலும் தலைகாட்டிற்று. 1959 ஆகஸ்டிலும் 1962 ஏப்ரலிலும் சில இடங்களில் நுழைந்தனர். இந்த இரண்டு சம்பவங்களைத் தவிர வேறு எந்த சம்பவமும் இந்தப் பகுதியில் நடந்ததில்லை.

இப்போதுதான் முதன் முதலாக நேபா பிரதேசத்தில் வடமேற்கு முனையில் தக்ளாவுக்குத் தெற்கே நுழைந்திருக்கின்றனர்.

கடைசியாக 1962 அக்டோபர் 20-ந் தேதி பெரிய தாக்குதல்களை நடத்திப் பெரும் பகுதிகளை வசப்படுத்திக்கொண்டனர். இது பச்சை ஆக்கிரமிப்பு.

இப்போது போர் நிறுத்தம் என்று சொல்லுகிறார்கள். 1958 முதல் அதிக தூரம் முன்னேறி, பல இந்தியப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக்கொண்ட பிறகு போர் நிறுத்தம் என்று சொல்லுகிறார்கள்.

அவர்களுடைய படைகள் ஆக்கிரமித்து வருவதைப் போலவே இந்தியா—சீனா எல்லையும் அவர்களுடைய வாதப்படி மாற்றம் அடைந்து வருகிறது.

அறிவுக் கதிர்

உன்னால் செய்யக் கூடியதைச் செய். செய்யப் போவதைப் பற்றிப் பெருமை கொள்ளாதே. செயலுக்குச் சொல்லைக் காட்டிலும் வன்மையதிகம். செயல் ஒன்றே அனுபவபூர்வமானது.—**சிம்சன்**

அறிவுள்ள மனிதர்களோடு வாதாடிப் பார்க்கலாம். பண்புள்ள மக்களோடு உரையாடினால் பயனுண்டு. ஆனால் கொடுங்கோலர்களோடு பேசுவதால் பயனில்லை. அங்கே தேவைப்படுவது, அவர்களை ஒழிக்கும் செயல், செயல், செயல்!

—**லாய்ட் காரிசன்.**

கல்வி கற்பிக்கும் புதுக் கருவி டெலிவிஷன்

(சாம் காஸ்டலீனோ.)

அமெரிக்காவில் வீட்டுக்கு வீடு மோட்டார் காரும், சலவை இயந்திரமும் சர்வசாதாரணம். இருபது ஆண்டுகளாக டெலிவிஷன் பெட்டியும் நாடு நெடுக மலிந்துவிட்டது. அமெரிக்கர் தங்கள் வீடுகளில் இருந்தவாறே பொழுது போக்கு நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டு மகிழ்கின்றனர், டெலிவிஷன் உதவியால்.

வெறும் பொழுதுபோக்கு இன்றி உருப்படியான கல்விப் பயிற்சி அளிக்கவும் பத்து ஆண்டுகளாக அமெரிக்கர் டெலிவிஷனைப் பயன்படுத்தி வருகிறார்கள். அரசாங்கமும், ஆசிரியர்களும் தனிப்பட்ட பல சங்கங்களும் செய்த முயற்சியால் டெலிவிஷன் ஒரு கல்விக் கருவியாக மாறியுள்ளது.

7,500 பள்ளிக்கூடங்களில் 30 லட்சம் பிள்ளைகள் டெலிவிஷன் பார்த்துப் பாடம் படிக்கிறார்கள். 250 கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயிலும் இரண்டரை லட்சம் மாணவர்களுக்கும் டெலிவிஷன் மூலம் பரீட்சைப் பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

பெரியவர்களின் பொது அறிவை வளர்க்கும் முதியோர் கல்வித் திட்டம் ஒன்றும் டெலிவிஷன் வழியாய் நடைபெறுகிறது.

நாடு நெடுகிலும் 63 நிலையங்களிலிருந்து இந்தக் கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இடையில் விளம்பரம் எதுவும் வருவதில்லை. முறையாக மூன்று கோடி மக்கள் கண்டு கற்றுப் பயனடைகிறார்கள்.

கல்வி கற்பிக்கும் டெலிவிஷன் ஏற்பாட்டுக்கென்று மத்திய அரசாங்கம் 1962-ல் சில அலை நீளங்களைத் தனிப்படுத்திக் கொடுத்தது. மூன்று ஆண்டுகளில் கல்வி டெலிவிஷன் திட்டம் நாடு முழுவதும் பரவிச் சிறப்பாக நடைபெறத் தொடங்கியது.

கல்வி டெலிவிஷன் ஏற்பாடு லாபநோக்கம் அற்றது; விளம்பரங்களையும் அவற்றால் கிடைக்கும் வருவாயையும் விரும்பிப் பணம் தேடுவதற்காக நடக்கும் டெலிவிஷன் கம்பெனிகளைப் போன்றது அல்ல. அந்தந்த இடத்துப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களுமே செலவுக்குப் பணம் கொடுக்க வேண்டும். போர்டு அறநிலையம் சென்ற ஏழு ஆண்டுகளாக 50 வகையான

கல்வி டெலிவிஷன் திட்டங்களுக்கு ஆதரவாக இரண்டுகோடி டாலர் கொடுத்து உதவியிருக்கிறது.

கம்பி இணைப்பு டெலிவிஷன்

விரும்பியவர் யாராயினும் காணக்கூடியவாறு ஆகாயத்தின் வழியாக ஒளிபரப்பும் டெலிவிஷன் ஏற்பாடு ஒருபுறம் இருக்க தனிப்படச் சில இடங்களுக்கு மட்டுமே கிடைக்குமாறு கம்பி வழியே டெலிவிஷன் நிகழ்ச்சிகளை அனுப்பிக் கல்வி கற்பிக்கும் முறையும் ஏறக்குறைய 300 இடங்களில் நடக்கிறது. இந்த முறைப்படி வகுப்பறைகளில் பல டெலிவிஷன் பெட்டிகள் இருக்கும்; இவை யாவும் ஒளிபரப்பும் நிலையத்துடன் கம்பி மூலம் இணைக்கப்பட்டிருக்கும்; நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சி இவற்றில் மட்டுமே தெரியும். இந்த முறை சிலவகைப் பாடங்கள் கற்பிக்க மிகவும் ஏற்றது. ஒரு வகுப்பில் நூறு மாணவர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கு ஆசிரியர் நுணுக்கமான விஞ்ஞானப் பரிசோதனை ஒன்று நடத்திக் காட்டினால், முன்வரிசைகளில் இருப்பவர்கள் மட்டுமே அதை ஒன்றுவிடாமல் கண்டு பயனடைய முடியும். இதே பரிசோதனையைத் தனியே ஓரிடத்தில் நடத்தி, இதைக் கம்பி டெலிவிஷன் மூலம் ஒளிபரப்பினால், வகுப்பறை நெடுகச் சிற்சில மாணவர்களுக்கு ஒன்றாகப் பல இடங்களில் டெலிவிஷன் பெட்டிகளை வைத்து, எல்லா மாணவர்களும் நன்கு காணும் படிச் செய்யலாம்.

கம்பி டெலிவிஷன் முறை சில இடங்களில் ஒரு தாலூகா முழுவதும் உள்ள பள்ளிகளையெல்லாம் இணைத்தும் நடைபெறுகிறது. மேரிலாந்து மாநிலத்தில் ஹேகர்ஸ் டவுன் தாலூகாவில் உள்ள 48 பள்ளிக்கூடங்களும் கம்பி மூலம் ஒரு டெலிவிஷன் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன; அங்கிருந்து வாரந்தோறும் 122 பாடங்கள் கற்பிக்கிறார்கள். பாடம் கற்பிக்கும் 19 படங்களும் டெலிவிஷனில் காட்டப்படுகின்றன. 18,000 மாணவர்கள் கற்கிறார்கள். டெலிவிஷன் இல்லையானால், இதேயளவு பாடம் சொல்லிக் கொடுக்க இன்னும் 135 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள்.

வைத்தியப் பயிற்சிக்கும் வகுப்பறைக் கம்பி டெலிவிஷன் சிறந்த உதவியாக விளங்குகிறது. அறுவை மருத்துவத்தை நேரில் இருந்து கண்டு படிப்பதைவிட, அதை டெலிவிஷன் செய்து வகுப்பறையில் இருந்து கண்டு படிப்பதே அதிகப் பயனுள்ளது என்பது சிக்காகோ பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியின் அனுபவம்.

பறக்கும் பள்ளிக்கூடம்

பறக்கும் விமானத்திலிருந்து பாடங்களை ஒளிபரப்பும் புதுமை

முறை ஒன்றைச் சென்ற ஆண்டு போர்டு அறநிலையம் தொடங்கி வைத்தது. அமெரிக்காவின் நடுப்பகுதியில் ஆறு மாநிலங்களில் உள்ள 13,000 பள்ளிக் கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் இந்த ஒரு விமானத்திலிருந்து பற்பல பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். இக் கல்வி நிலையங்கள் 200 மைல் சுற்று வட்டத்தில் உள்ளன; அவற்றில் 50 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். இத்தனை இடங்களுக்கும் பூமியில் இருந்தவாறே ஒளிபரப்பவேண்டுமானால், 14 டெலிவிஷன் ஒளிபரப்பு நிலையங்கள் தேவைப்படும்.

பொறுக்கியெடுத்த சிறந்த ஆசிரியர்கள் இவ் விமான டெலிவிஷன் திட்டத்தில் கற்பிக்கிறார்கள்.

திட்டத்துக்கு போர்டு அறநிலையம் 55 லட்சம் டாலர் கொடுத்துள்ளது; மற்றும் பல சங்கங்களும் தொழில் கம்பெனிகளும் பணம் கொடுத்துள்ளன. நாளடைவில், கல்வி நிலையங்களே செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ளும்.

பணம் சம்பாதிப்பதற்காக ஒளி பரப்பு நடத்தும் "ஏபுஸி", "ஸிபிஎஸ்", "என்பிஸி" என்ற மூன்று அமெரிக்க டெலிவிஷன் கம்பெனிகளுங்கூட மாணவர்களுக்கென்று கல்வி ஒளிபரப்புச் செய்யத் தொடங்கியுள்ளன. 1958 முதல் "என்பிஸி" நாடு நெடுகிலும் ஒளி பரப்பிவரும் ஒரு கல்வித் திட்டத்தை 300 கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் ஒப்புக்கொண்டுள்ளன; இவற்றின் மாணவர்கள் அந்த டெலிவிஷன்படிப் பாடம் படித்துப் பரீட்சை எழுதலாம். இப்பொழுது அதே கம்பெனி "அமெரிக்க ஆட்சி முறையின் அமைப்பும் பணிகளும்" என்ற பொருள்பற்றிக் கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரைக் கொண்டு நாடுநெடுகத் தன் ஒளிபரப்புமூலம் கற்றுக்கொடுக்கிறது. இதுவும் பரீட்சைப் பாடமே. "புதிய உயிர் நூல்" என்னும் பொருள் பற்றி "ஸிபிஎஸ்" என்ற டெலிவிஷன் கம்பெனி ஒளிபரப்பிக் கற்றுக்கொடுக்கிறது. இளம் மாணவர்களுக்கு விளங்கும் முறையில் செய்திகளை எடுத்துக் கூறும் டெலிவிஷன் திட்டம் ஒன்றை "ஏபிஸி" என்ற கம்பெனி ஒளிபரப்பி வருகிறது.

நன்மைகள்

பத்து ஆண்டுகளாக இவ்வாறு பல வழிகளிலும் டெலிவிஷனைப் பயன்படுத்திப் பாடம் சொல்லிக் கொடுத்ததன் பயனைச் சில உண்மைகள் தெளிவாகியுள்ளன. பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் கல்வி கற்பதற்கு வழக்கமான ஏற்பாடுகளைப் போலவே டெலிவிஷனும் நன்கு உதவுகிறது; பார்க்கப் போனால், கற்றுக்கொள்ள வேண்டும் என்ற பொறுப்பு உணர்ச்சி டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்கு அதிகமாக ஏற்படுகிறது.

ஆசிரியர்களும் டெலிவிஷன் கல்வி நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கிறார்கள்; ஆதலால், நன்கு சொல்லிக்கொடுக்கும் நுட்பங்களை அவர்களும் கற்றுக் கொள்கிறார்கள்; கற்றுக்கொடுக்கப் புதிய விஷயங்களையும் அறிந்துகொள்கிறார்கள்.

சில ஆசிரியர்களைக்கொண்டே பல இடங்களுக்குக் கற்றுக் கொடுக்க முடிகிறது; எட்டாத் தொலைவிலுள்ள சிறிய பள்ளிக் கூடங்களுக்கும் பெரிய பள்ளிக் கூடங்களின் கல்வி வசதி கிட்டுகிறது-டெலிவிஷன் முறையினால்.

இந்தியாவில்

இந்தியாவில், டில்லியிலிருந்து 15 மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள 144 பள்ளிக்கூடங்களுக்கு உதவும்படியாகச் சென்ற ஆண்டு அகில இந்திய ரேடியோ டெலிவிஷன் மூலம் பாடங்களை ஒளிபரப்பத் தொடங்கியது. இந்த ஆண்டு மேலும் 35 பள்ளிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகள் கிடைத்துள்ளன. எனவே, டெலிவிஷன் பார்த்துப் பாடம் படிக்கும் மாணவர் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50,000 ஆகும். ஒன்பதாம் வகுப்புக்கு ஆறு பாடங்களும், பத்தாம் வகுப்புக்கு நான்கு பாடங்களும் டெலிவிஷன் செய்யப்படுகின்றன.

இந்தியாவில் எழுத்தறிவைப் பரப்பும் திட்டம் வரவர வேகமாக முன்னேற டெலிவிஷன் பயன்படுமா என்பது ஒரு கேள்வி. இதை ஆராய 1959-ல் இந்தியாவுக்கு அமெரிக்க நிபுணர் நான்கு பேர் வந்தனர். டெலிவிஷன் மூலம் ஏழு அடிப்படை மொழிகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கலாம்; தலைக்கு அரை ரூபாய்கூடச் செலவாகாது என்று நிபுணர்கள் கூறினார்கள். அதன் பயனாக, அகில இந்திய ரேடியோவுடனும் இந்திய அரசாங்கத்துடனும் சேர்ந்து நிபுணர்கள் நான்கு ஆண்டுத் திட்டம் ஒன்று வகுத்தனர். திட்டத்தின் முதல் கட்டம் சென்ற அக்டோபர் மாதம் தொடங்கியது; அதற்கு வேண்டிய ஒளி பரப்புக் கருவிகள் பள்ளிக்கூடங்களில் வைப்பதற்குரிய டெலிவிஷன் பெட்டிகள் ஆகியவற்றை போர்டு அறநிலையம் வழங்கியது. கல்விக்கு டெலிவிஷனைப் பயன்படுத்தும் முயற்சியில் இந்த அமெரிக்க அறநிலையம் ஒரு வெளிநாட்டுக்கு உதவி வழங்கியது இதுவே முதல் தடவையாகும்.

ஒளிபரப்புவதற்கு முன்னைவிடப் பத்து மடங்கு ஆற்றல் வாய்ந்த கருவி ஒன்றை அகில இந்திய ரேடியோ இப்பொழுது நிறுவியுள்ளது.

இந்தியாவில் கல்வித்துறை டெலிவிஷனுக்கு மிகுந்த வாய்ப்பும் பயனும் உண்டு. ஆனால் அதற்குச் செலவு அதிகம். அதைத்தான் பொறுத்திருக்கிறது அதன் எதிர் காலம்.

அருந்திறல் படைத்த அறிஞர் பெருமகன்

எழுத்தாளர், தத்துவ அறிஞர், புதியன கா்ணும் விஞ்ஞானி, அரசியல் அறிஞர் எனப் புகழ் பெற்று விளங்கும் பெஞ்சமின் பிராங்ளின் வாழ்க்கை வரலாறு கதைபோல இனிக்கும். முதலில் இவர் அச்சகம் ஒன்றில் சிற்றாளாக வேலை செய்தவரே. கண்டது கற்கப் பண்டிதனுவான் என்ற முறைப்படி இவர் தம் அறிவைப் பெருக்கி, சிறந்த வணிகராகவும், பத்திரிகையாசிரியராகவும், நூலாசிரியராகவும், விஞ்ஞானியாகவும், சட்டசபை உறுப்பினராகவும், ராஜதந்திரியாகவும் உயர்ந்து அழியாப் புகழ் பெற்றார்.

இவர் வாழ்நாள் 18-ம் நூற்றாண்டின் பெரும் பகுதியையும் கண்டது. இவர் மின்தாங்கியைக் கண்டுபிடித்தவர்; தொலைப் பார்வைக் கண்ணுடியையும், வெள்ளெழுத்துக் கண்ணுடியையும் ஒரே கண்ணுடியாக இணைத்தவர். அமெரிக்காவின் தத்துவச் சங்கத்தையும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தையும் தோற்றுவித்தவர்.

இராஜதந்திரியாகவும் இவர் அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார். அமெரிக்காவை வன்மை மிக்க சுதந்திர ஜனநாயக நாடாக உருவாக்கத் துணை செய்த முக்கிய அரசியல் பத்திரங்கள் நான்கு. அந்நான்கிலும் கையொப்பமிட்டுள்ளவர் பெஞ்சமின் பிராங்ளின் ஒருவரே. விடுதலைப் பிரகடனம், பிரான்ஸோடு செய்த உடன்படிக்கை (சுதந்திரப் போர் வெற்றி காணத் துணை செய்த பத்திரம்), இங்கிலாந்தோடு செய்த சமாதான உடன்படிக்கை (சுதந்திரத்தை ஒப்புக்கொள்ள வழிவகுத்த பத்திரம்), அமெரிக்காவின் அரசியல் சட்டம் ஆகியவையே அந்த நான்கு முக்கிய பத்திரங்கள்.

பெஞ்சமின் பிராங்ளினின் தந்தையார் பாஸ்டன் நகரத்தில் மெழுகுவர்த்தி செய்து பிழைத்தவர். பெஞ்சமின் பிராங்ளின் 1706, ஜனவரி 17-ம் தேதி பிறந்தார். சிறு பையனுக இருந்த காலத்திலேயே ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொன்றையும் அறிய வேண்டும் என்னும் அவா அவரிடம் காணப்பட்டது. பேசப் பழகும் போதே வாசிக்கவும் பழகிவிட்டார். 12-வது வயதில் ஒரு சிறிய அச்சுக்கூடத்தில் வேலை பழகினர்.

படிப்பில் பசி அறியார்

கல்வியில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு அளவே இல்லை. விலைக்கு வாங்கக்கூடிய புத்தகங்கள், இரவலாகப் பெறக்கூடியவை யாவற்றையும் அவர் படித்தார்; இரவலாகப் பெற்றவற்றை இர

வெல்லாம் படித்து முடித்து, காலையில் கொடுத்துவிடுவார். வாசிப்பில் மூழ்கிவிடுவதால், சாப்பாடும் பல சமயங்களில் மறந்துபோகும். அதிகமாக உண்ணுதபோதுதான் தெளிவு ஏற்படுவதாகவும், எளிதாக அறிந்துகொள்ள முடிகிறதென்றும் அவர் சொல்லுவது வழக்கம்.

துணிந்து எதனையும் செய்யும் உள்ளம் படைத்தவர் அவர். எனவே 16 வயதாகும் முன்பே அவர் ஊரைவிட்டுக் கிளம்பிஞர். நியூயார்க் செல்ல விரும்பிஞர்; ஆஞல், பிலடெல்பியா நகரை அடைந்தார். சொந்தமாக அச்சகம் ஒன்று நடத்த வேண்டுமென்று அவர் மூன்றுண்டுகள் முயன்ருர். முயற்சி வீணுயிற்று. பின்னர், 19 வயதாகு முன்பே, இங்கிலாந்து சென்று பொருளீட்டத் துணிந்து, லண்டன் மாநகர் சேர்ந்தார்.

இங்கிலாந்தில் ஸர் ஐஸக் நியூட்டனின் ஆராய்ச்சி முடிவுகள் விஞ்ஞானத்தில் அவருக்கு ஊக்க மூட்டியிருக்கவேண்டும். அன்ருட வாழ்க்கையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதுபற்றி அவர் எண்ணலாஞர். அவர் ஆராயாத விஞ்ஞானத்துறை அக்காலத்தில் இல்லை.

மூன்றுண்டுகளுக்குப் பிறகு பிராங்ளின் பிலடெல்பியா திரும்பி, 'பென்சில்வேனியா கெஜட்' என்னும் பத்திரிகை தொடங்கிஞர். அந்நகரின் உண்மையான முதல் பத்திரிகை அதுதான். அம் முயற்சியில் வெற்றி கண்டதும், அவர் "ஏழை ரிச்சர்டு நாட்குறிப்பு" என்னும் சஞ்சிகை ஒன்று தொடங்கிஞர். "ஏழை ரிச்சர்டு" அதில் கூறிய அறிவுரைகளால் பெஞ்சமின் பிராங்ளின் பெரும் புகழ் பெற்ருர். ஏழை ரிச்சர்டு இவரது கற்பனையில் தோன்றிய கதாபாத்திரந்தான். அந்தப்பத்திரிகை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அவருக்குப் புகழ் பெற்றுக் கொடுத்தது.

முன்னேற்றம் காணவேண்டும் என்னும் ஆவல் மிகுந்தவர் பெஞ்சமின் பிராங்ளின். எனவே பொதுநல இயக்கங்கள் பலவற்றிற்கு அவர் தலைவராஞர். நகர போலீஸ் இலாகா ஒன்றை அவர் நிறுவிஞர். நகர வீதிகளுக்கு நல்ல சாலைகள் அமைக்கவும், விளக்குகள் ஏற்றவும், வீதிகளைத் துப்புரவாய் வைக்கவும் அவர் ஏற்பாடு செய்தார்.

பின்னர், விஞ்ஞானத் துறையிலும் அவர் சிறந்த வெற்றிகள் கண்டார். மின்விசை பற்றி அவர் சோதனைகள் நடத்திஞர். இடி முழக்கமும் சூறுவளியும் இருந்த சமயத்தில் கம்பியில் கட்டிக் காற்றுடி ஒன்றைப் பறக்கவிட்டு, மின்னல் என்பது மின்விசையே என்று அவர் நிறுவிக்காட்டிஞர். இவ்வுண்மையை அவர் கண்டுபிடித்ததால், வீடுகளையும், கோயில்களையும், கப்பல்களையும் மின்னலும் இடியும் தாக்காமல் பாதுகாக்கும் பொருட்டு உதவும் மின் தாங்கியைக் கண்டு பிடித்தார்.

1754-ம் ஆண்டுக்குப் பிறகு அரசியலே அவரது முக்கிய துறையாயிற்று. 1776-ல் விடுதலைப் பிரகடனம் வெளியிட்ட பின், அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரப் போராட்டத்தில் பிரான்ஸின் ஆதரவைத் தேட, பிராங்ளின் பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு அப்பொழுது 70 வயது. அவரது வயதும், இலக்கியத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் அவர் செய்திருந்த பணிகளும், அவரது பேச்சு, தோற்றம் முதலியவைகளும் பிரஞ்சு மக்களையும் பிரஞ்சு அரசினரையும் பெரிதும் கவர்ந்தன.

பிணக்கு அறுத்தார்

அமெரிக்கா விடுதலை பெற்ற பின் பிராங்ளின் பிலடெல்பியாவுக்குத் திரும்பி வந்து, அமெரிக்காவின் அரசியல் சட்டத்தை எழுதத் துணைசெய்தார். சட்டம் எழுதப் பெற்ற காலத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை அவர் தமது அறிவாற்றலாலும், நற்பண்பினாலும் தீர்த்து வைத்தார்.

1790 ஏப்ரல் மாதம் பெஞ்சமின் பிராங்ளின் காலமானார். இவர் எழுதியவற்றை இப்பொழுது அமெரிக்காவில் தொகுத்துக் கொண்டிருக்கின்றனர். நாற்பது பெரிய நூல்களாக அவற்றை வெளியிடவேண்டிவரும் என்று கருதுகிறார்கள் என்றால், அவர் எவ்வளவு எழுதியுள்ளார் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்!

" ஆரம்பக்கல்வி " ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரு. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மாணவர் பதிப்பிக்கும் பத்திரிகைகள்

"அமெரிக்காவில் ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் நான்கு ஆண்டுகளே; பத்திரிகைகளின் ஆட்சிக் காலமோ முடிவில்லாதது" என்றார் ஆஸ்கார் ஓயில்டு. "முடிவே இல்லாத பணி பத்திரிகைப் பணி; பத்திரிகைதான் நமது நாட்டின் பெருமை" என்றார் அமெரிக்க நூலாசிரியர் ஹென்ரி வார்டு பீச்சர்.

அமெரிக்க நாட்டில் பத்திரிகை இல்லாத ஊர் ஊராகாது; அது போலத்தான் அங்குள்ள பள்ளிக்கூடமும், கல்லூரியும், பல்கலைக் கழகமும். அங்கு பெரிய பட்டணங்களில் வெளியாகும் பத்திரிகைகளுக்கு நாள்தோறும் ஆறு, ஏழு பதிப்புகள் உண்டு. ஆனால் மாணவர் பத்திரிகைகள் மாத இதழாகவும், இரு வாரத்துக்கு ஒரு முறை வெளியாகும் இதழாகவும் இருக்கும்; சில இடங்களில் தினசரிகளாகவும் இருக்கும். அவற்றில் சில, "சைக்ளோஸ்டைல்" பிரதிகளாக வெளிவரும்; சில அச்சடித்தவையாக இருக்கும்.

பத்திரிகை வெளியிடும் வேலை அமெரிக்க மாணவர்கள் பெரிதும் விரும்பும் பணியாக உள்ளது. அது அவர்களுக்கு ஓய்வு நேரங்களில், பயனுள்ள ஒரு பொழுது போக்கு. அது மட்டுமல்ல. உலகப் பத்திரிகைகளைப் போலவே, மாணவர் பத்திரிகைகளும் செய்தி சொல்லவும், கலைத்துக்குரிய விஷயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும் வாய்ப்பாக உள்ளன.

எழுத்து வேலையில் மாணவர்களுக்குப் பயிற்சியும் உண்டாகிறது. படம் பிடித்தல், அச்சடித்தல், விநியோகித்தல் முதலிய துறைகளில் அனுபவம் உண்டாவதால், பத்திரிகை வெளியிடுவதற்கு ஆகும் செலவுகள் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. பிற்காலத்தில் பத்திரிகைத் தொழிலில் இறங்குபவர்களுக்கு இது நல்ல படிப்பாகும்.

பெரிய பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் பத்திரிகை வெளியிடும் வேலைக்கென்று தனிப்பட்ட குழு ஒன்று இருக்கும்; அதன் ஆசிரியரை ஆண்டுதோறும் மாணவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் சில கல்வி நிலையங்களில் ஆங்கிலத் துறை அல்லது பத்திரிகைக் கலைத்துறை வசமே பத்திரிகை வேலையும் விடப்பட்டுள்ளது; பத்திரிகை வேலையில் செலவிடும் நேரம் ஆங்கிலம் அல்லது பத்திரிகைக் கலையில் பரீட்சைப் பாடத்துக்கு உரிய படிப்பாகக் கருதப்படுகிறது.

பாடத் திட்டத்தில் அமையாத மாணவர் பத்திரிகைக்கு விளம்பரங்கள் மூலம் வருவாய் கிடைக்கிறது. பத்திரிகைச் சந்தா மூலமும் பணம் கிடைக்கும்; சந்தா

இல்லாத இடங்களில், ஆண்டுத் தொடக்கத்திலேயே பத்திரிகைக்கென்று கட்டணம் வாங்கிவிடுவார்கள்.

கல்வி நிலையத்தின் தேவைக்கும் மாணவர்களின் விருப்பத்துக்கும் ஏற்றவாறு மாணவர் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகும். பள்ளியில் படிக்கும் மாணவர்களே பெரும்பாலும் இப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பார்கள். ஆதலால், அப் பள்ளிக்கூடத்தைப் பற்றிய செய்திகளே ஏராளமாக இருக்கும். உள்ளூர்ப் பத்திரிகைகளில் வெளியாகும் நாட்டுச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் மீண்டும் மாணவர் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. வெளியுலகச் செய்தி ஒன்று நேரடியாக மாணவர்களைப் பற்றியதாக இருந்தால், அது மாணவர் பத்திரிகையில் மாணவர் போக்குப்படி விவரிக்கப்பட்டு முதல் பக்கச் செய்தியாக வெளியிடப்படும்.

மாணவர் பத்திரிகை மாணவர்களுக்குப் பத்திரிகைத் தொழிலில் எல்லா வகையான பயிற்சியும் அளிக்கிறது. எழுத எழுதவே எழுத்து திருந்தும் ஆதலால், மாணவர் பத்திரிகைகளில் காணும் நடை கற்றுக்குட்டிகளின் நடையாகவே இருக்கும். ஆயினும், மாணவர்கள் தங்கள் பத்திரிகைகளுக்கு ஆகும் செலவு அனைத்துக்கும், நல்ல தொழில் தெரிந்தவர்கள் போலவே, பணம் திரட்டி விடுகிறார்கள்; சில சமயம் சிறிது ஆதாயம் காட்டுவதும் உண்டு.

ஆதாயம் கருதி நடைபெறும் உலகப் பத்திரிகைகள், கல்வி நிலையங்களிலே மாணவர்கள் நடத்தும் பத்திரிகைகளைக் கவனித்து வருகின்றன. பத்திரிகைக் கலையில் சிறந்த மாணவர்கள் படிப்பு முடிந்து வெளியேறியதும் அவர்களை அவை விரும்பி ஏற்கும். சிறந்த மாணவர் பத்திரிகைகளுக்கு நாடு நெடுகிலும் பல பத்திரிகையாளர் சங்கங்கள் பரிசளிக்கின்றன; அதற்கென ஆண்டுதோறும் போட்டிகள் உண்டு.

அறிவுக் கதிர்

முன் பிறந்ததோர் காரணத்தாலே மூடரே, பொய்யை மெய்யெனலாமோ? முன்பு எனச் சொல்லும் காலமதற்கு மூடரே, ஓர் வரைதுறை உண்டோ?

—கவி பாரதியார்

கணிதமேதை இராமானுஜம்

(எம். எஸ். கல்யாணசுந்தரம்)

கும்பகோணத்தில் சாரங்கபாணி சந்நிதித் தெருவில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இராமானுஜன். அவர் தந்தை ஸ்ரீநிவாசய்யங்கார் ஒரு ஜவுளிக் கடையில்குமாஸ்தா. அவருடைய தாயின் ஊர் ஈரோடு. தாய் வகைப் பாட்டனர் கோர்ட்டில் ஒரு நாசர். சேலம் ஜில்லாவில் நாமக்கல்லில் கோயில்கொண்டுள்ள நாமகிரி தேவியிடம் அக் குடும்பத்தாருக்குப் பக்தியுண்டு. விவாகமாகிப் பல வருஷங்கள் வரை மக்கட்பேறில்லாதிருந்து அந்தத்தேவியின் அருளால் இராமானுஜன் பிறந்தான் என்பது அக் குடும்பத்தாரின் நம்பிக்கை. இது இயற்கையே. இராமானுஜனுக்கும் இந்த நம்பிக்கை வேர் விட்டிருந்தது. தன்னுடைய குல தெய்வம் கடினமானகணிதவினுக்களுக்கு விடைகளும், அடிப்படையான கருத்துக்களும் கனவில் தனக்குத் தோற்றுவிக்கிருள் என்றும், அவற்றை உலகத்தாருக்கேற்பக் கூறுவதில் தமது நிலை ஒரு வெறும் கருவியே என்றும் இராமானுஜனே பல முறை கூறியிருக்கிருர்.

இராமானுஜன் பிறந்த தேதி 1887 டிசம்பர் 22, அதாவது சர்வஜித்து வருஷம் மார்கழி மாதம்9–ம் தேதி. இராமானுஜன் கணக்கில் மாத்திரமே கெட்டிக்காரர் என்ற தவருனதோர் எண்ணம் சிலருக்கு உண்டு. தஞ்சை ஜில்லா பிரைமரி பரீட்சையில் முதல் இடம் பெற்றதால் அவருக்கு அரைச் சம்பளச் சலுகை கிடைத்துவந்தது.

சிறு வயதிலேயே அவர் சிந்தனையில் ஆழ்ந்தவர்; நக்ஷத்திரங்களின் எண்ணிக்கை, தொலைவு முதலியவற்றைப் பற்றிக் கேள்விகள் கிளப்புவார். இரண்டாம் படிவத்தில் படிக்கும்போது அவர் "கணிதம் கற்பிக்கும் பரம தத்துவம் என்ன?" என்று பலரைக் கேட்டார். மட்டரகமான விடைகளே கிடைத்தன.

அடுத்த ஒன்றிரண்டு வருடங்களில் அவர் பல கல்லூரிப் பாட விஷயங்களைச் சொந்த முயற்சியால் கற்றுர். பி. ஏ. மாணவர்கள் கூட அவரிடம் சந்தேகம் கேட்பார்களாம்.

ஹைஸ்கூல் நாட்களிலேயே அவர் ஊக்கத்துடன் ஒரு புத்தம் புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். அதன் பிறகு அதெல்லாம் ஒரு நூற்றுண்டுக்கு முன்பே ஐரோப்பிய மகா மேதை ஆய்லர் ஆராய்ந்து வெளியிட்ட விஷயம் என்று தெரிந்ததும் அவருக்கு, பாவம்,

மனம் எப்படி இருந்திருக்கும்! அக் காகிதங்களைச் சுருட்டி அவர் வீட்டின் ஓட்டடுக்கின் கீழ்ச் செருகி விட்டாராம்!

* * *

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் கார் என்னும் கணித உபாத்தியாயர் தயாரித்த நூல் ஒன்று ("ஸினாப்ஸிஸ் ஆஃப் ப்யூர் மாதமாடிக்ஸ்") இருந்தது. இங்கிலாந்தில் உயர்தர கணிதப் போட்டிப் பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்களுக்கான வினாத் தொகுப்பு அது. அந் நூலை யாரோ ஒருவர் ஆறும் படிவத்தில் படிக்கும் இம்மாணவனுக்குக் காட்டினார். பசியாய்த் தவிப்பவனை மிட்டாய்க் கடையில் தனியாய் விட்டுச் சென்றது போல் இருந்தது அவருக்கு.

பிற நூல்களின் உதவியோ பிற ஆசிரியர்களின் உதவியோ இல்லாமல் ஆயிரத்திற்கும் அதிகமான எல்லாக் கணக்குகளையும் போட்டுத் தீர்த்தார். தேவைப்படி - புது யுக்திகளும் சிருஷ்டித்துக் கொண்டார்; அவ் வினாக்களால் தூண்டப்பட்டு அவ்வப்போது தோன்றும் புதுப் பிரச்னைகளைக் குறித்துக்கொண்டார்.

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் நல்ல மார்க்கு வாங்கி "சுப்ரமண்யம் ஸ்காலர்ஷிப்" என்னும் பண உதவியுடன் அவர் எஃப். ஏ. வகுப்பில் சேர்ந்தார். ஆனால் அவ்வாண்டு கணித ஆராய்ச்சியில் தன்னை முற்றிலும் மறந்து இதர பாடங்களை அசட்டை செய்ததால், அவர் பரீட்சையில் தவறி, உபகாரச் சம்பளமும் இழந்தார்.

அதன் பிறகு யாரோ ஒருவரின் ஆலோசனையைக் கேட்டு ஊரை விட்டு வெளியேறினார். அவர் எங்கெல்லாம் சென்றார், என்ன செய்தார், எவ்வாறு உயிர் வாழ்ந்தார் என்பவை யாருக்கும் விவரமாகத் தெரியாது. வடக்கே தெலுங்கு ஜில்லாக்களுக்கும் சென்றார். ஆனால், 'வயிறு வாடிய' காலத்திலும் அவருடைய குறிப்பேடுகளின் பக்கங்கள் புது விஷயங்களை ஏற்ற வண்ணமிருந்தன.

இதற்கிடையில் ஒரு முறை அவர் ஊர் திரும்பியபோது, 1909-ல் அவருக்கு விவாகமாயிற்று; அவருடைய மனைவி திருமதி ஜானகி, குளித்தலைப் பக்கம். இனி அவர் ஓரிடத்தில் தங்கி ஏதேனும் வேலை செய்து சம்பாதிப்பது அவசியமாயிற்று. பல அல்லல்களுக்குப் பிறகு அவருக்கு திரு.வி.இராமஸ்வாமி அய்யர், பேராசிரியர் சேஷு அய்யர், திவான் பகதூர் ஆர். இராமச்சந்திர ராவ், திரு. எஸ். நாராயணய்யர் ஆகிய கணித ஆராய்ச்சியாளர்களின் உதவியால் நாராயண அய்யர் உத்தியோகம் வகித்த சென்னைத் துறைமுகக் காரியாலயத்தில் குமாஸ்தா வேலை கிடைத்தது. மேற்கூறிய உதவியாளர்கள் கணிதத்தில் தம்மைவிடச் சிறந்தவன் அந்தக்

குமாஸ்தா என்பதை அறிந்தவர்கள். இவ்விஷயமாக இராமச்சந்திர ராவ் எழுதிய குறிப்பு ஒன்று ரசமானது. போர்ட் டிரஸ்டு ஆபீஸின் தலைவர் ஸர். ஃபிரான்ஸிஸ் ஸ்பிரிங் என்பவரும் கணிதத்தில் ஆர்வம் உள்ளவர்.

இராமானுஜனின் கணிதக் கண்டுபிடிப்புகள் இந்திய கணித சங்கத்தின் சஞ்சிகைகளில் இடம் பெறத் தொடங்கின. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைப் பேராசிரியர் ஜீ. எச். ஹார்டி அதே ரகமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததால், மேற்கூறிய சில கட்டுரைகளை அவருக்கு அனுப்பும்படி இராமானுஜனுக்குச் சிலர் யோசனை கூறினார்கள். அவர் அவ்வாறே செய்தார்.

கடிதம் எழுதியவன் ஒரு மேதை என்பதைச் சட்டென்று உணர்ந்த ஆசிரியர், இராமானுஜன் தாமதமின்றித் தன்னிடம் வர வேண்டும் என்று எழுதினார். ஆனால், 50 ஆண்டுகளுக்கு முன் ஒரு வைஷ்ணவப் பிராம்மணன் கப்பல் பிரயாணம் செய்வது என்பது சுலபமா? பரந்த கடல் தயைகூர்ந்து அமைதியாக இருந்தாலும், குடும்பத்தார் குடிபாத்திரங்களிலேயே புயலைக் கிளப்புவார்களே!

இதற்கிடையே இந்திய சிதோஷ்ண இலாகாவின் தலைவராயிருந்த டாக்டர் ஜி. டி. வாகர் — இவ்விஷயத்தில் அக்கறைகொண்டார். அவர் தம் செல்வாக்கால் சென்னைச் சர்வகலாசாலையை அனுகி, இராமானுஜனுக்குக் கணிசமானபடி உபகாரச் சம்பளம் அளித்துத் தன் முழு நேரத்தையும் ஆற்றலையும் கணித சேவையில் ஈடுபடுத்த வசதியளிக்க வேண்டும் என்று யோசனை கூறினார். பல்கலைக் கழகம் ஒப்புக் கொண்டு மாதம் ரூ. 75 வீதம் இரண்டாண்டுகள் உதவி புரிய முன் வந்தது என்பது அக்காலத்துச் சூழ்நிலையில் மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்.

கடைசியில் கடல் பிரயாணத்தைப் பற்றிய ஆட்சேபங்கள் விலகின. இராமானுஜனின் தாயாருக்கு நாமகிரிதேவி சொப்பனத்தில் பகட்டான ஒரு காட்சி தோற்றுவித்து, “எக் காரியத்திற்காக உன் மகன் பிறந்தானோ அக்காரியம் நிறைவேறட்டும்; குறுக்கே நிற்காதே” என்று கட்டளையிட்டதாகக் கேள்வி.

* * *

சென்னை சர்வகலாசாலை மறுபடியும் ஆதரவு காட்டி வருடத்திற்கு 250 பவுன் வீதம் இரண்டு வருடத்திற்கு உதவி அளிக்கவும், துணிமணிச் செலவு, பிரயாணச் செலவு முதலியன ஏற்கவும் முன் வந்தது. பின்னர் அவ்வுதவியை 1919 ஏப்ரல் 1 வரை அளித்து வந்தது. அத் தொகையிலிருந்து மாதம் ரூ. 60 வீதம் சர்வகலாசாலை தம் பெற்றோருக்கு அனுப்ப வேண்டுமென்று இராமானுஜன் ஏற்பாடு செய்தார்.

1914 மார்ச் 17-ம் தேதி புறப்பட்டு அவர் மறு மாதம்

கேம்பிரிட்ஜ் அடைந்தார். அவருக்கு இடமளித்த ட்ரினிடி கல்லூரி நல்ல மனத்துடன் வருஷத்திற்கு 60 பவுன் வீதம் உதவி புரியவும் முன் வந்தது.

தற்கால ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்ற முறையில் எழுத அவர் கற்க வேண்டியது அவசியமாயிற்று. பேராசிரியர்கள் ஹார்டி, லிட்ல்வுட் இருவரும் அக் கல்வி புகட்ட ஆரம்பித்தனர். இருவரும் நேர்த்தியான ஆத்மாக்கள். “இராமானுஜனுக்கு நாங்கள் கற்பிப்பதைக் காட்டிலும் அதிகமாக அவரிடமிருந்து கற்கிறோம். அவரைச் ‘சீடனாகப்’ பெற்றது எங்கள் பாக்கியமே” என்று இருவரும் பலமுறை கூறியிருக்கிறார்கள். “இராமானுஜனின் ஒளியை மங்கலாக்கி விடுவேனோ என்ற பயம் எனக்கு உண்டு. எவ்வளவு ஆழமான, தகர்க்க முடியாத கற்பனை! அந்த வெள்ளப்பெருக்கு வடிவதாகவே தெரியவில்லை!” என்று ஹார்டி எழுதியிருக்கிறார்.

அட்சர லட்சம் மதிப்புள்ள தத்துவங்களை இராமானுஜன் தம் நோட்டுக்களில் வரைந்து கொண்டே போனார். ஐரோப்பிய கணித சஞ்சிகைகளில் அவை தோன்றின. அவற்றைப் படித்துப் புரிந்துகொண்ட இதர நிபுணர்கள் அவ்வழிகளில் மேலும் சென்றனர். புகழ்மாலைகள் வந்து விழுந்த வண்ணம் இருந்தன.

ஆனால், 1917 மே மாதம் அவர் உடல்நிலை கெடுவது தெரிந்தது. க்ஷயரோகம் என்ற சந்தேகம் ஏற்பட்டது. ‘குளிர் நாட்டை’ விட்டுத் தாய்நாடு திரும்பலாம். கிடைத்ததைக் கொண்டு ஆக்கப்படும் சுயம் பாக உணவை நிறுத்திச் சந்தோஷமாக வீட்டுச் சாப்பாடு சாப்பிடலாம் என்றால், உலக யுத்தம் நடக்கும்போது அது எப்படி சாத்தியம்?

ஆகவே, இங்கிலாந்திலேயே ஆரோக்கியஸ்தலங்களிலும், தனியார் சிகிச்சை விடுதிகளிலும் அவர் தங்கலானார். போகுமிடமெல்லாம் ஆராய்ச்சியையும் தொடர்ந்து நடத்தி வந்தார்.

1729 என்ற எண்ணைப் பற்றிய நிகழ்ச்சி இந்தக் காலத்தில்தான் நடந்தது. ஒரு முறை ஹார்டி அவரைப் பார்க்க வந்தபோது, ஆசிரியரின் டாக்ஸியின் இலக்கம் 1729 என்றறிந்து, இராமானுஜன், “ரசமான எண். இரு கன எண்களின் கூடுதலாக இருவகைகளில் 1729-ஐ அடையலாம். அந்தக் குணாதிசயமுள்ள பல எண்களில் 1729 சிறியது” என்றார்.

1918 பிப்ரவரி மாதம் ஒரு நற்செய்தி அளித்தது. இராமானுஜன் ராயல் சொஸைட்டியின் ஃபெலோவாக ஏற்கப்பட்டார். 30 வயதிலேயே, முதல் சிபார்சிலேயே அங்கீகாரம் கிடைத்தது. சிறப்பிக்கப்பட்டவர், சிறப்பித்த

வர் இருவருக்குமே கவுரவம். [ஏ. ஸி. வாடியா என்ற ஒருவர் முதல் இந்திய எப். ஆர். எஸ்.] இராமானுஜன் இரண்டாவது எப். ஆர். எஸ்.

அதே ஆண்டு அக்டோபர் மாதம் ட்ரினிடி காலேஜ் ஃபெலோவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அது மிகவும் விரும்பத் தக்க பதவி. ஃபெலோக்களுக்குக் கட்டாய அலுவல்கள் கிடையா; கவலையின்றி ஆராய்ச்சிகள் நிகழ்த்தலாம்; பிரசங்கங்கள் செய்யலாம். வருடத்திற்கு 250 பவுன்கள் வீதம் ஆறு வருடங்களுக்குப் பண உதவி கிடைக்கும்.

* * *

அமெரிக்க எழுத்தாளர் ஒருவரை அவர் மனைவி வழியனுப்பி வைப்பதற்காகப் புகை வண்டி நிலையத்திற்குச் சென்றாள். ரயில் புறப்படும் சமயம். அவர் மனைவியிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருள்களைத் தூக்கி வந்த கூலிக்காரனுக்கு முத்தம் கொடுத்தார். அந்த எழுத்தாளரின் மறதி எப்படி? யார் யாருக்கு எது சேரவேண்டுமோ, அதைச் சேராமல் செய்து விட்டதே இந்த மறதி!

* * *

ஓர் ஆபீசின் நிர்வாகி ஒருவர், உனக்கு மறதி அதிகமாகிப் போனதினால் இனி வேலைக்கு வரவேண்டாமென்று நேற்று சொல்லி அனுப்பினேனே, இன்

இராமானுஜன் 1919 ஏப்ரல் மாதம் சென்னை வந்து சேர்ந்தார். நகரத்திலிருந்த மிகச் சிறந்த டாக்டர்கள் இராமானுஜனைக் காப்பாற்றப் போட்டியிட்டனர். ஆனால் துரதிருஷ்டவசமாக அந் நோயாளி "எனக்கொன்றுமில்லை; இதென்ன வீண் ரகளை?" என்று சொல்லிக் கும்பகோணம், கொடுமுடி முதலான ஊர்களுக்குப் பிரயாணமானார். ஆனால் சென்னை நகர நண்பர்கள் விடா முயற்சியுடன் அவரை 1920 ஜனவரியில் சென்னைக்கு அழைத்து வந்தனர். ராவ்பகதூர் டி. நம் பெருமாள் செட்டியார் தம் வீட்டை அவருக்காக ஒழித்து விட்டார். ஆனால் ஏப்ரல் 26-ம்
தூக்கப் பிரியர். 'காலையில் எப்படி எழுந்திருப்பது?' என்று யோசித்தார். அந்த ஊரில் தபால்களை அதிகாலையில் கொடுப்பது வழக்கம். சிந்தித்தார். தமது பெயருக்குத் தபால் தலை ஒட்டாமல் ஒரு கடிதம் எழுதி அதை முந்தைய தினம் தபாலில் சேர்த்துவிட்டார்.

அடுத்த நாள் காலை.

தபால்காரன் வீட்டைப் பலமாகத் தட்டினான். அந்த மனிதர் எழுந்து ஜன்னலைத் திறந்தார். 'ஐயா, உங்களுக்குத் தபால் தலை ஒட்டாமல் கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அதற்கு ஐந்து பென்னிகள் கொடுங்கள்' என்றான் தபால்காரன்.

தூக்கக் கலக்கத்திலிருந்த அந்த மனிதர், 'ம்...அதைத் திருப்பிக்கொண்டு போய்விடு.

லோகத்திற்குப் பறந்து சென்று விட்டதை அவன் கவனிக்கவில்லை போலும்.

"எளிமை, அடக்கம், தம் சகாக்களிடமிருந்து கிடைத்த சிறு சிந்தனைக் கொடைக்கும் மனமார்ந்த நன்றியுணர்ச்சி — இவை தம் மாணவனின் குணாதிசயம்" என்று ஆசிரியர் ஹார்டி குறிப்பிட்டிருக்கிறார். "விஞ்ஞானிகள் ஏங்கிப் போட்டியிடும் எஃப். ஆர். எஸ். அவருக்குக் கர்வமே உண்டாக்கவில்லை. முன் போல சகஜமாகவும் தம் பொறுப்பு அதிகரித்து விட்டது போலவும் நடந்து கொண்டார்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இராமானுஜனுக்கு மதப் பற்றுதலும் தீர்மானமான தெய்வ நம்பிக்கையும் உண்டு.

இங்கிலாந்திலிருந்து அவர் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதின கடைசிக் கடிதம் படிக்கத் தகுந்தது. ஏழை மாணவர் பால் அவர் இரக்கப்பட்டு, "தமக்குக் கிடைக்கவிருக்கும் பெருந்தொகைகளில் ஒரு சிறு பகுதிக்கே இந்தியாவில் செலவிருக்குமாகையால்" மீதியை ஏழை மாணவர்களுக்காகச் செலவிடத் திட்டமிட்டிருந்தார்.

—"தினமணி"

எங்கள் பரிச்சயம்" என்று இருவரும் பலமுறை கூறியிருக்கிறார்கள். "இராமானுஜனின் ஒளியை மங்கலாக்கி விடுவேனோ என்ற பயம் எனக்கு உண்டு. எவ்வளவு ஆழமான, தகர்க்க முடியாத கற்பனை! அந்த வெள்ளப்பெருக்கு வடிவதாகவே தெரியவில்லை!" என்று ஹார்டி எழுதியிருக்கிறார்.

அட்சர லட்சம் மதிப்புள்ள தத்துவங்களை இராமானுஜன் தம் நோட்டுக்களில் வரைந்து கொண்டே போனார். ஐரோப்பிய கணித சஞ்சிகைகளில் அவை தோன்றின. அவற்றைப் படித்துப் புரிந்துகொண்ட இதர நிபுணர்கள் அவ்வழிகளில் மேலும் சென்றனர். புகழ்மாலைகள் வந்து விழுந்த வண்ணம் இருந்தன.

தொடர்ந்து நடத்தி வந்தார்.

1729 என்ற எண்ணைப் பற்றிய நிகழ்ச்சி இந்தக் காலத்தில் தான் நடந்தது. ஒரு முறை ஹார்டி அவரைப் பார்க்க வந்த போது, ஆசிரியரின் டாக்சியின் இலக்கம் 1729 என்றறிந்து, இராமானுஜன், "ரசமான எண். இரு கன எண்களின் கூடுதலாக இருவகைகளில் 1729-ஐ அடையலாம். அந்தக் குணாதிசயமுள்ள பல எண்களில் 1729 சிறியது" என்றார்.

1918 பிப்ரவரி மாதம் ஒரு நற்செய்தி அளித்தது. இராமானுஜன் ராயல் சொஸைட்டியின் ஃபெலோவாக ஏற்கப்பட்டார். 30 வயதிலேயே, முதல் சிபார்சிலேயே அங்கீகாரம் கிடைத்தது. சிறப்பிக்கப்பட்டவர், சிறப்பித்த

நினைவாற்றல்

(கலைப்பித்தன்)

மறதி ஒரு பொல்லாத நோய். பள்ளியிலே மாணவனை, 'கணக்கு ஏன் செய்து வரவில்லை?' என்கிறார் ஆசிரியர். மாணவன் 'மறந்து விட்டேன் சார்' என்கிறான். அவன் உண்மையிலேயே மறந்தும் இருக்கலாம்; மறக்காமலும் இருக்கலாம். ஆனால், இந்த மறதி யார் யாரை எப்படி யெப்படி ஆட்டிப் படைத்துள்ளது என்று பார்ப்போம்:

* * *

அமெரிக்க எழுத்தாளர் ஒருவரை அவர் மனைவி வழியனுப்பி வைப்பதற்காகப் புகை வண்டி நிலயத்திற்குச் சென்றாள். ரயில் புறப்படும் சமயம். அவர் மனைவியிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருள்களைத் தூக்கி வந்த கூலிக்காரனுக்கு முத்தம் கொடுத்தார். அந்த எழுத்தாளரின் மறதி எப்படி? யார் யாருக்கு எது சேரவேண்டுமோ, அதைச் சேராமல் செய்து விட்டதே இந்த மறதி!

* * *

ஓர் ஆபீசின் நிர்வாகி ஒருவர், உனக்கு மறதி அதிகமாகிப் போனதினால் இனி வேலைக்கு வரவேண்டாமென்று நேற்று சொல்லி அனுப்பினேனே, இன்றைக்கு ஏன் மறுபடியும் வந்தாய்? என்று கேட்டார்.

'அடடா! மறதியாக வந்து விட்டேன் சார்' என்று பதிலளித்தார் வேலைக்கு வந்த குமாஸ்தா.

* * *

ஏப்ரீன் என்ற ஊரில் வாழ்ந்த ஒருவர் ஒரு சமயம விடியற்காலையில் பயணஞ் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், அவரோ தூக்கப் பிரியர். 'காலையில் எப்படி எழுந்திருப்பது?' என்று யோசித்தார். அந்த ஊரில் தபால்களை அதிகாலையில் கொடுப்பது வழக்கம். சிந்தித்தார். தமது பெயருக்குத் தபால் தலை ஒட்டாமல் ஒரு கடிதம் எழுதி அதை முந்தைய தினம் தபாலில் சேர்த்துவிட்டார்.

அடுத்த நாள் காலை.

தபால்காரன் வீட்டைப் பலமாகத் தட்டினான். அந்த மனிதர் எழுந்து ஜன்னலைத் திறந்தார். 'ஐயா, உங்களுக்குத் தபால் தலை ஒட்டாமல் கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அதற்கு ஐந்து பென்னிகள் கொடுங்கள்' என்றான் தபால்காரன்.

தூக்கக் கலக்கத்திலிருந்த அந்த மனிதர், 'ம்...அதைத் திருப்பிக்கொண்டு போய்விடு.

இப்படிப்பட்ட மறதியை அனுமதிக்க முடியாது' என்றார்!

* * *

லங்காஷயரில் ஞாபக மறதியால் ஒரு பொருளை - அதுவும் மிகப்பெரிய பொருளை — ஒருவர் விட்டுவிட்டுச் சென்று விட்டார். 'லங்காஷயரில் ஓரிடத்தில் விமானம் ஒன்று இருந்தது. அதன் சொந்தக்காரர் உடனே வந்து அதை எடுத்துக்கொண்டு போகலாம்' என்று விளம்பரம் வெளியிட வேண்டியிருந்தது! இந்த மறதி எப்படி?

* * *

நேரந் தாழ்த்தி வந்த சப்ளையர், 'வேறு எதுவோ வேண்டுமென்று கேட்டீர்களே? மறந்து விட்டேன். என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

அதற்குச் சாப்பிடுபவர், 'அதைத்தான் நானும் நினைவு படுத்திக் கொண்டிருக்கிறேன்' என்றார்.

* * *

சர் தாமஸ் ஆல்வா எடிசன் முட்டைக்குப் பதில் தமது கைக் கடிகாரத்தை வெந்நீரில் போட்டு வேக வைத்தார். 'நீங்கள் யார்?' என்று கேட்டவரிடம் தம் பெயரை மறந்துவிட்டுத் திண்டாடினார் எடிசன்.

அவர் தம் பெயரை அறியத் தம் பெயர் பொறிக்கப்பட்டுள்ள அட்டையைத் தேடினார். பின்னர் எடிசனுக்குப் பின்னாலுள்ள ஒருவர் அவர் பெயரை நினைவூட்டினார்

* * *

அமெரிக்க வழக்கறிஞர் டேனியல் வெப்ஸ்டர் அரசாங்கத்தில் புதிய நூறு தங்க நாணயங்களைக் கஜானாவில் வாங்கினார். ஆனால் பல நாட்கள் சென்று தம் பாக்கெட்டில் கையை விட்டுப் பார்த்தார். அந்த நாணயங்களைக் காணோம். அந்த நாணயங்களின் அழகை வர்ணித்து அவற்றைத் தம் நண்பர்களுக்குக் கொடுத்தது பின்னர்தான் அவர் நினைவுக்கு வந்தது.

* * *

பேராசிரியர் லெஸ்சிங் இரவில் தம் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினார். ஜன்னல் வழியாகப் பார்த்தான் வேலைக்காரன். இருட்டாக இருந்ததால் பேராசிரியரை அவன் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே, யாரோவென நினைத்துக்கொண்டு 'பேராசிரியர் வெளியே சென்றிருக்கிறார்' என்றான். 'அப்படியா? பரவாயில்லை. நான் பிறகு வருகிறேன்' என்ற பேராசிரியர், உள்ளே செல்லாமல் வெளியே நடந்தார்!

* * *

பிரபல விஞ்ஞானி சர். சி.வி. ராமன் ஒரு வகுப்பில் நுழைந்தார். பையன்களெல்லாம் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தனர். பிறகுதான் அவருக்குக் காரணம் தெரிந்தது. காரணம் என்ன தெரியுமா? ஒரு கன்னத்தில் மாத்திரம் க்ஷவரஞ் செய்துவிட்டு, மறு கன்னத்தில் வெறும் சோப்பு மாத்திரம் தேய்த்திருந்தார்! மறதியின் மகிமை எப்படி?

—"தினமணி"

தீப்பெட்டி "லேபிள்" சேகரிக்கும் பொழுதுபோக்கு

(மார்லிஸ் ஸ்டாடிஜெல்)

பல நாடுகளின் தபால் தலைகளைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டுவதுபோல நெருப்புப் பெட்டிகளின் மீது ஒட்டப்பட்டுள்ள "லேபிள்"களைச் சேகரிப்பதையும் பலர் ஒரு பொழுது போக்காகக் கொண்டு ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். இந்த லேபிள்கள் கொண்ட சர்வதேசக் கண்காட்சி யொன்று சமீபத்தில் டஸ்ஸல்டார்பில் நடைபெற்றது. எகிப்து மாஜி மன்னர் பரூக், தாய்லாந்தின் முன்னாளைய சக்கரவர்த்தி சுலாலங்கார்ன், ஸ்பெயினின் அரசர் அல்பான்ஸ் ஆகியவர்கள் இப்பொழுதுபோக்கில் மிகவும் ஆர்வம் காட்டினர். 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் 25,000 தீப்பெட்டி லேபிள்கள் இக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. ரஷ்யப் பிரமுகர் ஒருவர் இந்த லேபிள்கள் சேகரிப்பதற்காகவென்றே உலகின் பல பாகங்களுக்கும் சென்று திரும்பியிருக்கிறார்.

தபால் தலைகள் சேகரிப்பது ஒருபொழுதுபோக்காக இருந்து வருவது எல்லாருக்கும் தெரியும். நெருப்புப் பெட்டி லேபிள்கள் சேகரிப்பதும் இம் மாதிரி பொழுது போக்குகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது. இந்தப் பொழுது போக்கில் சாதாரண மக்கள் மட்டுமின்றி ஸ்பெயின் தேசத்து அரசரான அல்பான்ஸ், எகிப்து நாட்டின் மாஜி மன்னர் பரூக், தாய்லாந்தின் முன்னாள் சக்கரவர்த்தி சுலாலாங்கார்ன் ஆகியோரும்கூட இதில் சிரத்தை காட்டி ஏராளமான "லேபிள்"களைச் சேகரித்து வந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

இவ்வருடம் டஸ்ஸல் டிராப் நகரில் இந்த "லேபிள்"கள் சேகரிப்புக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. உலகின் நாடுகள் சுமார் 60-ன் இடமிருந்து 25,000-க்கு மேற்பட்ட நெருப்புப் பெட்டி "லேபிள்"கள் இக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இந்த லேபிள்கள் அநேகமாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியானவை காட்சிக்காக மட்டுமின்றி, விலை கொடுத்து வாங்கவும், தங்களிடமுள்ள ரகத்தைக் கொடுத்துவிட்டு இல்லாத ரகங்களைப்பரிவர்த்தனை செய்து கொள்ளவும் இவை வைக்கப்பட்டிருந்தன. நெதர்லாந்து ராணி ஜூலியானா, சீனாவின் மாசேதுங், பிரஸிடெண்ட் கென்னடி, கியூபாவின் பிடெல்

காஸ்டிரோ, கடைசி ஜெர்மன் சக்கரவர்த்தி வில்லியம் - II இவர்கள் உருவங்கள் கொண்ட லேபிள்கள் பக்கத்தில் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன.

போலந்து நாட்டிலிருந்து வந்த தீப்பெட்டிகளில் அந்த நாட்டு விளையாட்டு வீரர்களின் உருவங்கள் காணப்பட்டன. ஸ்விஸ் தீப்பெட்டிகளில் பலரக தேசிய உடைகள் அணிந்த உள்நாட்டு மக்களின் உருவப் படங்கள் அச்சிடப்பட்டிருந்தன. பிரான்ஸ் தீப்பெட்டிகளில் கார்ட்டூன் படங்கள் இடம் பெற்றன. யூகோ லேபிள்களில் ரஸ்தா ஒழுங்கு விதிகள் பற்றிய படங்கள் காணப்பட்டன. ரஷ்யா, ஜாஸ்பாண்ட், ஜாஸ் சங்கீத வித்வான்களைத் தீப்பெட்டி லேபிள்களில் வெளியிட்டுக் கௌரவித்திருந்தது. ஜப்பானும் சீனாவும் சில நாடோடிக் கதைகளில் வரும் பாத்திரங்களைத் தங்கள் லேபிள்களில் வெளியிட்டிருந்தன.

ஸ்வீடன் 1870-ல் வெளியிட்ட சில சித்திரக் காட்சிகள் அந்நாட்டு லேபிள்களில் இடம் பெற்றிருந்தன.

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்பெயின் வெளியிட்ட தீப்பெட்டி லேபிள்கள் எல்லாருடைய கவனத்தையும் கவருவதாக இருந்தன. ராஜ்யத்தின் தலைவர்களின் உருவப் படங்கள் அவைகளில் இடம் பெற்றிருந்தன.

ஜானிவாக்கர் என்ற பிராந்திப் புட்டி கம்பெனியார், விளம்பரத்திற்காகத் தீப்பெட்டி லேபிள்களில் ஜானிவாக்கர் உருவத்தை வெளியிட்டிருந்தனர். இதுவும் இக்கண்காட்சியில் முக்கிய இடம் பெற்றது.

இந்தத் தீப்பெட்டிகளின் லேபிள்களைக் கொண்டே கடந்த வரலாறுகளைப் பற்றி அறிய முடிகிறதென்றும் இந்த "லேபிள்"களைச் சேகரிப்பது முட்டாள்தனமான வேலையில்லை என்றும் இக் கண்காட்சி சம்பந்தமாக வெளியிடப்பட்டிருந்த ஒரு துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த "லேபிள்"களைச் சேகரிப்பது என்பது இலேசான காரியமில்லை. ஒரு ரஷ்யக் கோமகன் இந்த லேபிள்களைச் சேகரிப்பதற்காக என்றே உலக முழுவதும் சுற்றி வந்திருக்கிறார். இவர் 5384 தீப்பெட்டி லேபிள்கள் சேகரித்தார்.

ஸ்டாம்பு சேகரிப்பவர்கள் எப்போது ஸ்டாம்புகளை ஒரு பொழுதுபோக்குக்காக சேகரிக்க ஆரம்பித்தார்களோ அதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னமேயே தீப்பெட்டி லேபிள் சேகரிப்பது ஆரம்பமாகிவிட்டது. அதுவும் மேற்கு ஜெர்மனியில் இந்த "லேபிள்"கள் மிக உற்சாகமாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன. விளம்பரத்திற்கும் தீப்பெட்டி தக்க சாதனமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

கிருஸ்துமஸ் விழா வழக்கங்கள்

(பிரெட் காலென்பார்க்)

கிருஸ்துமஸ் விழாவையொட்டிச் சில பிரதேசங்களில் வெவ்வேறு பழக்க வழக்கங்கள் இருந்து வருகின்றன. ஜெர்மனியில் கிருஸ்துமஸ் தினத்திற்கு முன்வரும் மூன்று வியாழக் கிழமைகள் மிக விசேஷமாகும். ஸெயின்ட் பார்பாரா, சாந்தா கிளாஸ், ஸெயின்ட் லூஸியா இம் மூன்று தினங்களும் மிகவும் முக்கியமாகக் கொண்டாடப்படுகின்றன. இவை எப்படி ஏற்பட்டன என்ற விவரம் இக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

பெரியஜெர்மன் நகரங்களில் இப்பொழுது கிருஸ்துமஸ் விழாவையொட்டி அலங்காரங்கள் செய்வது ஆரம்பமாகிவிட்டது. ஜெர்மனியில் ஒரு மாதம் முதற்கொண்டே இவ்விழாவையொட்டி 4 மெழுகுவர்த்திகள் ஒவ்வொரு வீட்டிலும் ஏற்றி வைப்பார்கள். ஒவ்வொரு மெழுகுவர்த்தியும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையை உணர்த்துவதாகுமாம். குழந்தைகள் கரோல் பாட்டுகளைப் பாட ஆரம்பித்துள்ளனர்.

ஜெர்மனியில் கிருஸ்துமஸ் தினத்திற்கு முன் வரும் மூன்று வியாழக் கிழமைகளும் மிகவும் முக்கியமானவையாகும். அன்று மந்திரக்காரி, பேய் பிசாசுகள் உலாவுமாம். இப்போதும் குழந்தைகள் அம்மாதிரி வேடங்களை அணிந்து வீடுகளுக்குச் செல்வார்கள். இந்தப் ''பேய்'' களுக்கு ஆப்பிள் பழங்கள், கற்கண்டு முதலியவைகள் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து கிடைக்கும்.

இதைத் தவிர ஸெயின்ட் பார்பாரா தினம், சாந்தா கிளாஸ் தினம், ஸெயின்ட் லூஸியா தினம் இம்மூன்றும் விசேஷமாகக் கொண்டாடப்படுவதுண்டு.

டிஸம்பர் 6-ந் தேதி சாந்தா கிளாஸ் தினம் ஜெர்மனியில் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடப்படுவது வழக்கம். பிராடெஸ்டென்ட் பிரிவினர் சாந்தா கிளாஸை, நெச்ட் ரூப்ரெச்ட் என்று அழைக்கிறார்கள். சாந்தா கிளாஸ் வேடமிட்ட ஒருவர் ஒவ்வொரு வீடாகச் சென்று குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் முதலியன கொடுத்துச் செல்வார்.

சாந்தா கிளாஸ் பற்றி இப்போது எல்லாருக்கும் தெரிந்திருந்த போதிலும் இம்மாதிரி ஒருவர் 1000 வருடங்களுக்கு

முன் உண்மையில் வசித்திருந்தார் என்பது அநேகருக்குத் தெரியாது. கி. பி. 1012-ம் ஆண்டில் (946 வருடங்களுக்கு முன்பு) கோல்பிக் என்ற கிராமத்தில் ரூபர்டஸ் என்ற பாதிரி வசித்து வந்தார். சாந்தா கிளாஸ் என்றழைப்பது அவரைத்தான் என்று பிராடெஸ்டண்டுகள் கருதுகின்றனர்.

டிசம்பர் 4—ந் தேதி ஸெயின்ட் பார்பாரா தினம் கொண்டாடப்படுகிறது. சுரங்கத் தொழிலாளர்களின் தெய்வம் இவர். கிருஸ்துவர்களின் முக்கியமான ஞானிகள் 14 பேர்களில் இவர் ஒருவர். பார்பாரா எகிப்தில் வசித்து வந்ததாகவும் இவர் கிருஸ்தவ மதத்தைத் தழுவியதைக் கண்டு கடுங்கோபம் கொண்ட இவர் தகப்பனார் டியோஸ்கர் இவர் தலையை வெட்டிவிட்டதாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவம் நடைபெற்ற சில நிமிடத்திற்குள் மின்னல் ஏற்பட்டு அதனால் தாக்கப்பட்டுப் பார்பாராவின் தந்தை அந்த ஸ்தலத்திலேயே மாண்டார். இவர் தினம் கொண்டாடுவதில் சுரங்கத் தொழிலாளர்கள், இராணுவ வீரர்கள் ஆகியோர் மிகவும் சிரத்தை காட்டுகின்றனர்.

ஸெயின்ட் லூஸியா தினம் டிசம்பர் 13-ந் தேதி கொண்டாடப்படுவதாகும். ஸ்வீடனில் இத்தினம் மிகவும் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று ஒவ்வொரு குடும்பத்திலும் அவ்வீட்டுப் பெரிய பெண் லூஸியா போல வேடமணிந்து சமையலறைக்குச் சென்று விருந்து தயாரித்துக் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் துயிலிலிருந்து எழுப்புவது வழக்கம். லூஸியாவின் பாட்டை இவர்கள் பாடுவார்கள்.

ஸ்வீடனிலுள்ள ஒவ்வொரு காரியாலயமும் தொழிற்சாலையும் கூட லூஸியா தினத்தைக் கொண்டாடுவது வழக்கம். ஸ்டாக்ஹோம் மிக அழகான ஸ்வீடிஷ் பெண்ணைத் தேர்ந்தெடுத்து அமெரிக்காவிலுள்ள டெலவேர் ராஜ்யத்திற்கு அனுப்பி அங்கு வசிக்கும் ஸ்வீடிஷ் மக்களுக்கு அவள் மூலம் பரிசுகள் அனுப்பி வைக்கும்.

அறிவுக் கதிர்

வாழ்க்கையில் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். நம் அன்பினால் அவர்கள் துன்பச் சுமையைக் குறைக்க முயல வேண்டும். இதைக்கூட நம்மால் செய்ய முடியவில்லையென்றால் நாம் எதற்காகத் தான் இந்த உலகத்தில் வாழ வேண்டும்?

—ஜார்ஜ் எலியட்.

பண்டைத் தமிழர் விழாக்கள்

(டாக்டர் மா. இராசமாணிக்கனார்)

சங்க காலத் தமிழகத்தில் திரு விழாக்கள் கடவுள் வழிபாடு என்னும் பெரு நோக்கினையே முதன்மையாகக் கொண்டு நடை பெற்றன. அக் காலத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களுக்கு ஏற்பக் கடவுளர் அமைந்திருந்தனர். முல்லை நிலமக்கள் திருமாலையும், குறிஞ்சி நிலமக்கள் முருகனையும், மருத நிலமக்கள் இந்திரனையும், நெய்தல் நிலமக்கள் வருணனையும் தந்தம் வழிபடு கடவுளராகக் கொண்டிருந்தனர்.

"மாயோன் மேய காடுறை
உலகமும்
சேயோன் மேய மைவரை
உலகமும்
வேந்தன் மேய தீம்புனல்
உலகமும்
வருணன் மேய பெருமணல்
உலகமும்"

என்று **தொல்காப்பியர்** தமிழுலகம் கண்ட கடவுட் காட்சியைக் கூறுகின்றார். இக் கடவுளர்க்குத் தமிழ் மக்கள் எடுத்த சிறப்புக்கள் பல விழாக்களாக விளங்கின. பாலை நிலத்திற் கொற்றவைக்கு விழா நடத்தல் மரபு.

விழாவில் கலைச் சிறப்பு

கடவுள் வழிபாட்டுடனே கலைச் சிறப்பும் திருவிழாவில் முதன்மை பெற்றிருந்தது. தமிழ் மக்கள், தமக்கென வரையறுத்துக் கூறிய கருப்பொருள்களுள் தெய்வத்தையும் பறை, யாழ் முதலிய இசைக் கருவிகளையும் கொண்டிருந்தனர். தெய்வமும் கலையும் கலைப்பொருள்கள் என்று கொண்ட தமிழ் மக்களுடைய உயரிய எண்ணம் வியந்து பாராட்டற்பாலது.

"தெய்வம் உணாவே மாமரம்
புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென
மொழிப"

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். ஈண்டுத் தெய்வத்தோடு யாழின் பகுதியும் சேர்த்துரைக்கப் பட்டது என்னை? தெய்வவுணர்வும் கலை யுணர்வும் வாழ்க்கையில் மிக இன்றியமையாதவை என்று நமது முன்னோர் கருதி, அவற்றைக் கைக்கொண்டு வாழ்ந்தனர்; எனவே, தாம் கொண்டாடிய விழாக்களிலும் தெய்வத்தையும் கலையையும் சிறப்பித்தனர். சிற்றூரிலும் பேரூரிலும் நடந்த விழாக்களில் **விறலியர்** (நடன மகளிர்) பங்கு கொண்டு பல்வகை நடனங்கள் புரிந்தனர் என்று சங்க நூல்கள் உரைக்கின்றன. பெரிய ஊரில் நடக்கும் திருவிழாவில் **பொருநர்** (வேடம் புனைந்து ஆடுவோர்)

பலர் கூடித் தமது கலைத் திறனைக் காட்டிய பின்பு ஊருக்குத் திரும்புவது வழக்கம் என்பதைப் பொருநராற்றுப் படையின் பின் வரும் தொடக்க வரிகள் தெரிவிக்கின்றன :

"அறு அ யாணர் அகன்றலைப் பேருர்ச்
சாறுகழி வழிநாள் சோறுநசை யுறாது
வேறுபல முன்னிய விரகறி பொருந !"
(சாறு — விழா)

தெய்வ வுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் கலை யுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் மக்களிடம் விழாக் காலங்களில் நிரம்பியிருக்குமன்றோ? 'விழா' என்னும் சொல் விழைவு என்னும் சொற் பொருளின் அடியாகப் பிறந்தது என்பதைக் காணும் போது, இவ்வுண்மை முற்றும் புலனாகும். இக் காலத்தும் கொண்டாட்டம் என்ற சொல்லை விழாவின் பொருளில் நாம் பயன்படுத்துகின்றோம்.

நகரத்தில் விழாக்கள்

காலப்போக்கில் தெய்வ விழாக்கள் சிற்சில நகரங்களில் சிறப்புடன் நடந்தேறின. திருமால் வழிபாடு திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், திருவேங்கடம் முதலிய இடங்களிலும், முருக வழிபாடு திருப்பரங்குன்றம் முதலிய இடங்களிலும், சிவ வழிபாடு தில்லை முதலிய இடங்களிலும், சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தன. அதே சமயத்தில் பூம்புகார் போன்ற பேரூர்களில் பல கோயில்களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட நிலையினையும் நாம் இலக்கியச் சான்றுகள் கொண்டு அறிகின்றோம். காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழாவின்போது பற்பல கோயில்களிலும் நடந்த விழாக்களைச் சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது :

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்
நீல மேனி வாலியோன் கோயிலும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறு வேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்."

அதே காலத்தில் சான்றோர், அரசர், பத்தினிப்பெண்டிர் ஆகியோர் தெய்வங்களாக வழிபாடு இயற்றப் பெற்றனர். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டம், கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் எடுத்த கோயிலையும் அதில் அவன் நடத்திய விழாவையும்தெரிவிக்கின்றது.உரை பெறு கட்டுரை என்னும் பகுதியில் கொங்கிளங்கோசர், இலங்கைக் கயவாகு ஆகியோரும் பத்தினிக் கோட்டம் சமைத்து விழாவணி நிகழ்த்திய செய்தி காணப்படுகிறது. பிற்காலச் சோழ மன்னர்கள் தமது பெற்றோர்கட்கும், சிறப்புறு மனைவியர்க்கும்

கோயில்களை அமைத்து விழாச் செய்தமையைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம்.

இந்திர விழா

அரசன் பிறந்த நாள் விழா, முடிபுனை விழா, கார்த்திகை விழா முதலிய பல வகை விழாக்கள் சங்க நூற்களிற் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் இந்திர விழாவும் புதுநீர் விழாவும் குறிக்கத்தக்கவை.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இந்திர விழாவின் சிறப்பைத் தனித் தனிக் காதைகளில் அமைத்துக் கூறுகின்றன.

"மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசு தலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை
புண்ணிய நன்னீர் பொற் குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழு நீராட்டி"

எனச் சிலப்பதிகாரமும்,

"விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று...
மேலோர் விழைய — விழாக் கோள் எடுத்த நாலேழ் நாள்..."

என **மணிமேகலை**யும் இந்திரனுக்கு நடந்த விழாச் சிறப்பினைப் போற்றியுரைக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இடங்களில் வாழ்ந்த தொழிலாளரும் கலைஞரும் வணிகரும் இந்திர விழாவின் பொருட்டுத் தத்தம் இருப்பிடங்களைத் தூய்மை செய்தனர். சிலர் காவற் பூதத்தின் பீடிகையில் அவரை, துவரை, எள்ளுருண்டை, பூ, புகை, பொங்கல் முதலியவற்றைச் சொரிந்து துணங்கைக் கூத்தாடினர். மறக்குடி மகளிர்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி."

ஆரவாரத்துடனே பூப்பலியிட்டுப் போயினர். பற்பல கடவுளர்க்கு விழாக்கள் ஒரு பால் நடந்தன. அருகர் தானங்களில் அறமுரைத்தலும் பிற திருக்கோயில்களில் வழிபாடுகளும் ஒருபால் சிறப்புற்றன. பகை மன்னர்கள் தமது அடிமைத்தளை நீங்கப் பெற்று ஒருபால் விடுதலை பெற்றனர். பலவகை இசை வல்லார் ஒருபால் இனிய இசை விருந்தளித்தனர்.

இந்திர விழாவில் சமயக் கணக்கரும் சோதிடரும் பல மொழி பேசும் மக்களும் ஐம் பெருங் குழுவினரும் எண்பேராயத்தரும் கலந்துகொண்டனர். தோரண வீதிகளிலும், பல மன்றங்களிலும், பூரண கும்பம் — பொற்பாலிகை — பாவை விளக்கு முதலியன பரப்பப்பட்டன. கமுகு, வாழை, கரும்பு

முதலியன நடப்பட்டன. பசும் பொன்னாலாகிய தூண்களில் முத்துமாலைகளை முறையாக மக்கள் தொங்க விட்டனர்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்பினர்; மாடங்களிலும் வாயில்களிலும் கொடிகளைக் கட்டினர். குளிர்ந்த மணலையுடைய பந்தல்களிலும், அம்பலங்களிலும் பல அறிவுரைகளைக் கேட்க விரும்புவோர் கூடினர். சமயவாதிகள் தத்தம் சமயத்தில் பொருந்திய பொருள்களைக் குறித்துப் பட்டி மண்டபங்களில் அமர்ந்து விவாதம் புரிந்தனர்.

புதுநீர் விழா

ஆண்டுதோறும் ஆடித்திங்களில் ஆறுகளில் புதுநீர் வருதல் மரபு. நீர் மக்களுக்கு உயிர் போன்றதன்றோ? அதனால் அப் **புதுநீர்** வரவை **விழா**வாகக் கொண்டாடுதல் தமிழர் மரபு. இவ் விழா மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது என்பதைப் **பரிபாடல்** தெரிவிக்கின்றது. முகைப்பருவத்தர், முகை அவிழ்ந்தன்ன பருவத்தர், நங்கையர், நம்பியர், இளைஞர், முதியர் முதலிய எல்லோரும் தத்தம் வசதிக்கேற்றவாறு ஊர்திகளிலோ நடந்தோ ஆற்றுக்குச் செல்வர். மகளிர் வையையில் நீராடி 'வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி'க்கு வழிபாடு செய்வர். ஆடல் மகளிர் ஆடல் புரிவர்; பாடல் மகளிர் பாட்டிசைப்பர்; இளைஞர்கள் ஆற்று வெள்ளத்தில் குதித்து நீந்துவர்; சிலர் மிதவைகளைக் கொண்டு அக்கரைக்கும் இக்கரைக்கும் சென்று வந்து விளையாடுவர். ஆடவரும் பெண்டிரும் தத்தம் பொருள் நிலைக்கேற்றவாறு பொன், வெள்ளி, செம்பு இவற்றால் செய்த மீன், இறால், நண்டு இவற்றை வையையை வாழ்த்திக் கொண்டே புது வெள்ளத்தில் எறிவர்.

வையையின் இரண்டு கரைகளிலுமுள்ள சிற்றூர்களில் வாழும் உழவர்கள் வெள்ளத்தைக் கண்ட மகிழ்ச்சியால் கூத்தாடித் தத்தம் வயல்களில் நீரைப் பாய்ச்சுவர். உழத்தியர் புது வெள்ளத்தில் கண் சிவப்பேறக் குடைந்து நீராடுவர். இங்ஙனம் பாண்டிய நாட்டு மக்களுக்குச் செவிலித் தாயாக விளங்கும் **வையை** யென்னும் எழில் பெரு நங்கை, தன் மக்கள் தன்னை வாழ்த்தலும் வழிபடுதலும் செய்யப் பூவாடை போர்த்து அசைந்தாடி அன்ன நடை நடந்து செல்லுவாள்.

—**"பத்மஜோதி"**

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : R. சேஷாத்திரி, B.A., B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்	பாடப் பயிற்சி	திறவு கோல்
சென்னை	0·75 ந. பை.	0·50 ந. பை.
செங்கற்பட்டு	0·75 ந. பை.	,,
வட ஆற்காடு	0·75 ந. பை.	,,
தென் ஆற்காடு	0·75 ந. பை.	,,
சேலம்	0·75 ந. பை.	,,
கோயம்புத்தூர்	0·75 ந. பை.	,,
நீலகிரி	0·75 ந. பை.	,,
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.	,,
தஞ்சாவூர்	0·75 ந. பை.	,,
மதுரை	0·75 ந. பை.	,,
இராமநாதபுரம்	0·75 ந. பை.	,,
திருநெல்வேலி	0·75 ந. பை.	,,
கன்னியாகுமரி	0·75 ந. பை.	,,
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.	,,
ஆறும் வகுப்பு	0·87 ந. பை.	,,
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.	,,
எட்டாம் வகுப்பு (E. S. L. C.)	0·62 ந. பை.	,,
எட்டாம் வகுப்பு (புதியபாடத் திட்டப்படி)	ரூ. 1·25 ந. பை.	,,
ஒன்பதாம் வகுப்பு	ரூ. 1·25 ந. பை.	0-75 ,,
பத்தாம் வகுப்பு	ரூ. 1·50 ந. பை.	

பாடப் பயிற்சி திறவு கோல்

(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல் போட்டிருக்கிறோம். பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். இதையெல்லாம் யோசித்து எமது பாடப்பயிற்சிகளுக்கு வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல்

எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இணையாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு எட்டணா (50 ந. பை.) பிரதிக்கு வீதம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்புவாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இணையாக அனுப்பிவைக்கப்படும்.

மானேஜர்,
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,
சென்னை-1.

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்து மதங்கள் பலவற்றின் முரண்பாடுகளை யெல்லாம் இதன் மூலம் தீர்த்துவிட்டார் அவர். நீண்ட காலமாக பக்தி, ஞானம், கர்மம் ஆகிய மார்க்கங்களில் நிலவிய சச்சரவுகளை எல்லாம் தீர்த்துவிட்டார்.

வாழ்க்கையின் அடைவு இதுவே என்று சுவாமிகள் குறிப்பிட்ட விடுதலை பெறுதல், அத்வைத உணர்வின் மூலமே சாத்தியமாகும். இதற்கு மேல் மதம் செல்வது இயலாது.

மதத்தை மூடியிருந்த பாசியை விலக்கினார் அவர். 'ஆன்மா தன்னை வழிபடுதலே மதம்' என்று அறிவுறுத்தினார். நம்பிக்கையும் வலிவுபெற இந்த இலட்சிய சித்திக்குத் தேவை என்றார்.

"நம்பிக்கை; நம்பிக்கை; தன்னம்பிக்கை. கடவுள் நம்பிக்கை. இதுவே பெருமை பெறும் இரகசியம்" என்றார்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட தேவை யிருக்கிறதே! வலிவு. அது பற்றியும் அவர் சொன்னார்:—

"இது பெரியதோர் உண்மை. வலிவே வாழ்வு; வலிவின்மையே மரணம். வலிவே வசதி; என்றுமுளது; அழியாதது. வலிவின்மை துன்பம்; சிரமம்; மரணம்."

இவ்வாறாக சுவாமி விவேகானந்தர் மனித குலத்துக்கு அளித்தது யாதெனில், பல்வேறுபட்ட மதங்களும் ஒருங்கு சேரத்தக்க பொதுவான கேந்திரம் ஒன்றை அளித்ததே!

தமது உபதேசங்களில் காணப்படும் சர்வ மத சமரச நோக்கினாலும், அன்பாலும், இதனைச் சாதித்துவிட்டார் அவர்.

—"ஆனந்தவிகடன்"

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் : இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	10	28-5-'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	5	28-5-'58
மூன்ரும் வகுப்பு	0	8	0	5	28-5-'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	13	18-5-'60

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0	8	0	...	...
மூன்ரும் வகுப்பு	0	12	0	43	13-5-'59
நான்காம் வகுப்பு	0	14	0	25	13-5-'59

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	1	4	0	39	18-5-'60

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0	10	0	...	...
மூன்ரும் வகுப்பு	0	12	0	...	...

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

நான்காம் வகுப்பு (மாவட்ட வாரியாக)	1	14	0	44-46	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	12	0	43	18-5-'60

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	1 4 0	26	18–5–'60

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0 6 0	...	...
மூன்றும் வகுப்பு	0 7 0	...	....

ஆசிரியர் : M. விவேகானந்தா, B. Sc., L. T.

நான்காம் வகுப்பு	0 10 0	30	13–5–'59

துணைப் பாட புத்தகங்கள்

சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	15	18–5–'60

நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	17	18–5–'60

CONNEMARA PUBLIC LIBRARY

Venkatesan Press, Madras–1.